பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 மாசி 16 ரபி-ஆகி 11 இதழ் 18
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 28-2-80

UNIVERSITY OF SRI LANKA
RECEIVED
-7-
PERIODICALS DIVISION
LIBRARY

சீனிவிலை அதிகரிப்பில்லை; பதுக்கினால் நடவடிக்கை

உணவு அமைச்சு எச்சரிக்கை!

[கொழும்பு]

சீனியின் விலை அதிகரிக்கப்படமாட்டாது என்று உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு நேற்று திட்டவட்டமாக மறுத்தது.

சீனியின் விலை அதிகரிக்கப்படலாம் என்ற வதந்தியின் காரணமாக வியாபாரிகள் சீனியைபெரும்அளவில் பதுக்கி வருவதாகக்கிடைத்துள்ள தகவலைத்தொடர்ந்து மேற்படி அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

சிலவாரங்களுக்குமுன் சீனியின்விலை அதிகரிக்கப்பட்டது. மீண்டும் சீனியின் விலையை

(8-ம் பக்கம் பார்க்க)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டம்

மாவட்ட அபிவிருத்திசபைகள் நிறுவப்பட்டதும் மீளாய்வு!

நேற்று மந்திரிசபைமுடிவு

(கொழும்பு)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிறுவப்பட்டதும் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டம் மீளாய்வு செய்யப்படும்"-

நேற்று நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. உள்ளூர் அதிகார சபைகளுக்கு கைத்தொழில், வர்த்தக நடவடிக்கைகளில் சுதந்திரம் கொடுப்பதென்றும் மந்திரிசபை தீர்மானித்தது.

புதிய நியமனங்கள்

வேலை வங்கிக்கூடாகவே சகல புதிய நியமனங்களும் வழங்கப்படவேண்டும். தகைமையுடையவர்களுக்கு அனுபவம் கோரப்படாமலேயே வேலைகளை வழங்கலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத் தாதிகளுக்கான வயதெல்லை 25 இலிருந்து 30 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இம்மாத முடிவுக்குள் 67ஆயிரம் தொன்மா கொழும்புத் துறைமுகத்திற்கு வந்துசேரவிருக்கின்றது என்று உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ், பி. ஹேரத் தெரிவித்தார். (ம)

மாணவி மர்ம மரணம்:

காரொன்றும் சாரதியும் பொலிஸ் காவலில்

பரு. நீதவான் ஸ்தலத்திற்கு விஜயம்

[யாழ்ப்பாணம்]

மாணவி கமலாவின் மர்ம மரணம் தொடர்பாக பருத்தித்துறை பொலிசார் கார் ஒன்றைக்கைப்பற்றி அதன் சாரதியையும் கைதுசெய்துள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திரா குணரட்ண, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரி. இரத்தினசபாபதி ஆகியோர் தொடர்ந்தும் புலன்விசாரணை செய்துவருகின்றனர்.

பொலிசாரால் தேடப்பட்டுவரும் ராஜன் இதுவரை கைது செய்யப்படவில்லை.

நேற்றையதினம் சம்பவம் நடைபெற்ற இடத்தை பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன், யாழ். சட்ட வைத்திய அதிகாரி திரு. சரவணபவானந்தன், பருத்தித்துறைப் பொலிஸ்பிரிவு சப் இன்ஸ்பெக்டர் ரி. இரத்தினசபாபதி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர். (புலோ-நி)

……

துட்டகைமுனுவின் அஸ்தி

(கொழும்பு)

'தக்கின்ன' தகோபாவின் அஸ்தி ஆராய்ச்சிக்காக பாரிசுக்கு அனுப்பப்பட்டு அது இரண்டாயிரம்வருடங்களுக்கு முற்பட்டதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வஸ்தி துட்டகைமுனுவினுடையதென்றும் தெரிவிக்கப்படுவதால் அதைப்பேணிப் பாதுகாப்பதற்கான முயற்சிகளும் எடுக்கப்படவுள்ளன. [ம]

ஆப். கம்பூச்சியாவிலிருந்து வெளியார் வெளியேறவேண்டும்

இலங்கை - நேபாள தலைவர்கள் கூட்டறிக்கை

(கொழும்பு)

ஆப்கானிஸ்தான்: கம்பூச்சியா, ஆகிய நாடுகளிலிருந்து சகல வெளிநாட்டுத் துருப்புகளும் வாபஸ் பெறப்படவேண்டுமென்று இலங்கையும் நேபாளமும் வற்புறுத்தியுள்ளன.

நேபாள மன்னர் வீரேந்திராவும், ராணி ஐஸ்வரியதேவியும் இலங்கைக்கு மேற்கொண்ட மூன்றுநாள் விஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

தென்கிழக்காசியாவிலும் தெற்கு ஆசியாவிலும் ஏற்பட்டுள்ள நிலைமைகள் பற்றி மன்னர் வீரேந்திராவும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவும் ஆராய்ந்ததாகவும் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள தலையீடுகள் தொடர்பாக இரு தலைவர்களும் பெருங்கவலை தெரிவித்துள்ளனர்.

கம்பூச்சியாவினதும், ஆப்கானிஸ்தானதும் சுதந்திரம், இறைமை, பிரதேச அந்தஸ்து ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கும் அவை தாங்களாகவே தம்மை வெளியார் தலையீடு இன்றி பாதுகாத்துக்கொள்ளவும் தாங்கள் ஆதரவளிப்பதாக இரு தலைவர்களும் அறிவித்துள்ளனர். இந்த இரு நாடுகளிலிருந்தும் எல்லா வெளிநாட்டுப் படைகளும் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் இரு தலைவர்களும் கேட்டுள்ளார்கள்.

உலகில் சில பகுதிகளில் நெருக்கடி நிலைமையும் பதற்றமும் நிலவுவது குறித்து இரு தலைவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

நேபாளத்தை ஒரு சமாதானப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தவேண்டும் என் மன்னர் வீரேந்திரா கருத்துத் தெரிவித்துள்ளார்.

கோவை செழியன் ராஜிநாமா!

(சென்னை)

தமிழ்நாடு திட்டக்குழுவின் துணைத்தலைவரும், அ. தி. மு. க. பிரமுகருமான திரு. கோவை செழியன் இப்பதவியை ராஜிநாமாச் செய்துள்ளார். அ. தி. மு. கழகத்திலிருந்தும் அவர் ராஜிநாமாச் செய்துள்ளார்.

மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

ஜனுப் நஸீரின் வேகநடை சாதனைமுயற்சி

நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

வேக நடையில் புதிய உலகசாதனையை நிலைநாட்டும் முயற்சியை ஜனுப் பரீத்நஸீர் நாளை மாலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றார்.

நடுவர் குழுவில் கொழும்பு "அட்வான்சர்ஸ் கிளப்"பும் இடம்பெறுகின்றது. இக்கழகத்தைச் சேர்ந்த திரு. சத்தியசீலன், நடுவர் குழுவின் ஒரு பிரதிநிதியாகக் கடமையாற்றுவார்.

வேக நடையில், லிவர்பூலைச் சேர்ந்த கர்னல் ரிச்சாட் இராசா 72 மணி 54 நிமிடத்தில் 231 மைல்தூரம் நடந்து உலகசாதனையை நிலைநாட்டியிருந்தார். இந்தச் சாதனையை முறியடித்து புதிய உலகசாதனையை நிலைநாட்டுவதற்கு ஜனுப் பரீத் நஸீர் நாளை மாலை 4 மணிக்கு யாழ் சுப்பிரமணியம் பூங்காவைச் சுற்றி வேகநடையை ஆரம்பிப்பார்.

'டுவிஸ்ட்' சாதனை வீரர் ஜனுப் நஸீர் பின்நோக்கி வலம்புரி பாணியில் கொழும்பிலிருந்து யாழ்நகருக்கு சைக்கிளில் வந்து உலக சாதனையை நிலை நாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

ஜனுப் நஸீரின் நிகழ்ச்சியை வைத்திய கலாநிதி பி. சி. பிலிப் ஆரம்பித்துவைப்பார்.

நேபாளமன்னர் பயணமானார்

(கொழும்பு)

நேபாளமன்னர் வீரேந்திர விக்கிரம ஷாதேவும் மகாராணியும் நேற்றுகாலை விமான மார்க்கமாக தாயகம் புறப்பட்டனர்.

ஜனாதிபதி, அவரது பாரியார், பிரதமமந்திரி, அவரது பாரியார் மற்றும் அமைச்சர்களும், பிரமுகர்களும் மன்னர் தம்பதிகளை அன்புடன் வழி அனுப்பிவைத்தனர்.

பண்ணாகம் கொலை வழக்கு:

எதிரி விடுதலை!

(மாவிட்டபுரம்)

பண்ணாகம் கொலை வழக்கில் குற்றச்சாட்டை நிரூபிக்கப் போதிய சாட்சியங்கள் இல்லாமையால் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

பண்ணாகத்தைச் சேர்ந்த ந. செல்வராசா என்பவரை பொல்லால் தாக்கியும், கத்தியால் குத்தியும் கொலை செய்ததாக ரி. துரைசிங்கம் என்பவர் மீது சங்கானைப் பொலிசார் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதி மன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் ஒரேயொரு சாட்சியான செல்லையா நாகராசா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவதினம் பண்ணாகம் சந்தியில் எதிரியின் கடையின் முன் நின்று காலமானவர் வாக்குவாதம் செய்துகொண்டிருப்பதைக் கண்டேன். அச்சமயம் காலமானவர் எதிரியிடம் பணம் கேட்பதையும் அவதானித்தேன் எதிரி பணமில்லையெனக் கூற காலமானவர் கடையின் அலுமாரிகளை உடைத்தார். அப்போது

(8-ம் பக்கம் பார்க்க)

ஜகஜீவன்ராம் ராஜிநாமா!

(சென்னை)

ஜனதா கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து திரு ஜகஜீவன்ராம் ராஜிநாமாச் செய்துள்ளார்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்,
ஊர்காவற்றுறை

காரைநகர், மத்திய வீதியைச் சேர்ந்த முருகேசு வேலுப்பிள்ளை கைம்பெண் தங்கமுத்துவின் மரணசாதனச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்

வேலுப்பிள்ளை செல்வநாயகம், மத்திய வீதி, காரைநகர். — மனுதார்

எதிராக

வேலுப்பிள்ளை இராசநாநாயகம், மத்திய வீதி காரைநகர். — எதிர்வாதி

மரண சாதன)
நியாயாதிக்கம்) இல: / 03

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேற்குறிப்பிடப்பட்டிருக்கும் இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 7-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றூர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 14-ந் திகதியிடப்பட்ட நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்.

தயாரித்தவர்:
அ. மரியாம்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காட்டும் தவணை 1980-ம் ஆண்டு பங்குனிமாதம் 07-ந் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி

தா. குலஞானம்,
பதிவாளர்

07-2-1980

5077

வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி — நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 5000க்கும்மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 7-3-80-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால் மூலம் "தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்

தலைவர்

கரவெட்டி.
21-02-1980.

5036

4 தொகுதிகளில்

இந்திரா காங்கிரஸ் வெற்றி!

புதுடில்லி, பெப். 26

ராய்பரேலி தொகுதி உட்பட ஐந்துலோகசபைத்தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தலில் 4 தொகுதிகளை இந்திரா காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது.

கர்நாடக மாநிலத்திலுள்ள குல்பார்கா தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. சி. எஸ். ஸ்டீபன் 75 ஆயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றிபெற்றூர்.

கடந்த லோகசபைத்தேர்தலில் புதுடில்லித் தொகுதியில் போட்டியிட்ட திரு. ஸ்டீபன் முன்னுள் வெளியுறவு அமைச்சர் திரு. ஏ.பி. வாஜ்பாயினுல் தோற்கடிக்கப்பட்டது தெரிந்ததே.

மேற்கு வங்காளத்திலுள்ள பேரம்பூர் தொகுதியில் இந்திய மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர் திரு. பட்டாச்சாரியார் ஒரு லட்சத்து ஆறுயிரம் அதிகப்படியான வாக்குகளால் இந்திரா காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்துள்ளார், (இ)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை தென்கிழக்கைச் சேர்ந்த இராமு கந்தசாமி என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருட்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.

வழ. இல. T/ 3478.

கந்தசாமி கைம்பெண் செல்வமணி, யாழ். வீதி யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனமில்ல மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1980-ம் ஆண்டு மாசி மாதம்29-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்முனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

1980-ம் ஆண்டு தை மாதம் 22-ந் திகதி.

நீதிமன்ற ஆணைப்படி

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

என்னுல் வரையப்பட்டது
தா. சங்கரப்பிள்ளை
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி.

5067

லேத் இயக்குநரும், லொறிச் சாரதியும் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும் (Latheman) மலைநாட்டுப் பகுதிகளில் லொறி ஓடக்கூடியவரும் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள லொறிச் சாரதியும் (Lorry Driver) தேவை.

உடனே நேரில் வரவும்

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி.

5079

தவக்கால நற்சிந்தனை

என் இளமை இயேசுவிற்கே!

இளைஞனே எழுந்துநில், சிந்தனை செய், மத்தேயு நற்செய்தி 19-ம் அதிகாரத்தில் இயேசுவுக்கும் ஒரு வாலிபனுக்குமிடையில் நிகழ்ந்த உரையாடலை வாசித்து சிந்தனை செய்.

அவ் இளைஞனிடத்தில் இருந்த ஆர்வத்தை, திறந்த மனத்தை, நல்லொழுக்கத்தைப் பாராட்டிய இயேசு, "இன்னும் ஒன்று உனக்குக் குறைவாயிருக்கிறது, உனக்கு உள்ளதெல்லாம் ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடு......பின் என்னைப் பின்செல்" என்றூர்.

நீ உன் இளமையை எவ்வாறு நோக்குகின்றுய்? உன்னில் இருக்கும் ஆர்வம், துடிப்பு, உதாரகுணம் எவ்வகையில் பயன்படுகின்றது. நீ இன்று உனக்கு, உன் குடும்பத்திற்கு, உன் சமூகத்திற்கு, நீ பிறந்த மண்ணுக்கு ஆற்ற வேண்டிய பணிகள் பல உண்டு. உன்னில் இருக்குப் திறமைகள், ஆற்றல்களை, அறிவை, இல்லர் தவர்களோடு பகிர்ந்துகொடுக்கும் வாழ்வில் மகிழ்ச்சி கொள். நீ உன் அயலானுக்குப் புரியும் ஒவ்வொரு நற்செயலும் இயேசுவிற்கே செய்கிறுய்.

—வண மேரி பஸ்ரியன் அடிகள்.

வீடுடைத்து திருட்டு

(மன்னுர்)

மன்னுர் பட்டின வீடொன்றில் பட்டப்பகலில் பொருட்கள் களவாடப்பட்டுள்ளது. வீட்டில் உள்ள பெண் கடமையின் நிமித்தம் வெளியே சென்ற சமயம் திருடர்கள் வீட்டின் பின்பக்கக் கதவால் உள்ளே நுழைந்து அலுமாரியில் இருந்த பொருட்களைச் களவாடிச் சென்றனர். களவு போன பொருட்களின் பெறுமதி இன்னும் கணக்கிடப்படவில்லை. கைரேகை நிபுணர்கள் வந்ததன் பின்பே களவு போன பொருட்களின் பெறுமதியை அறியமுடியும். இத் திருட்டு சம்பந்தமாக மன்னுர் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (கு)

கிரகணத்தால் கண்பார்வை இழந்தவர் சுகமடைந்தார்!

(மட்டக்களப்பு)

சூரிய கிரகணம் பார்த்து கண் பார்வையிழந்த கோட்டைக் கல்லாறு வாசியான திரு. ஏ. செல்லத்துரை தற்போது பூரண சுகம் அடைந்துள்ளார்.

இரு கண்களும் பாதிப்படைந்த மேற்படி நபர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தா .. (கு)

பொதுக்கிணறு

(நெல்லியடி)

அச்சுவேலி கிராமச் சபையின் 8-ம் வட்டார மக்களுக்கு பொதுக்கிணறு ஒன்றை அமைத்துக் கொடுக்க சர்வோதய இயக்கம் முன்வந்துள்ளது.

இதற்கான நிலத்தை தந்துதவுமாறு சர்வோதய இயக்கம் அச்சுவேலி கிராம சபையின் விசேட ஆணையாளர் திரு. என். வி. ஜெகநாதனைக் கோரியுள்ளது. (கு)

ஈரானுக்கு மீண்டும் அமெரிக்க பத்திரிகையாளர்

தெஹ்ரான், பெப். 27 அமெரிக்கப் பத்திரிகையாளர்களை மீண்டும் ஈரானுக்குள் அனுமதிக்க ஈரான் புரட்சிச் சபை இணங்கியுள்ளது.

ஈரானுக்கு விரோதமான செய்திகளை எழுதக்கூடாது உட்பட்ட சில நிபந்தனைகளின் பேரில் குறிப்பிட்ட சில நிருபர்களையே அனுமதிக்க புரட்சிச் சபை முடிவுசெய்துள்ளது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் 86 அமெரிக்கப் பத்திரிகையாளர்களை ஈரானிலிருந்து புரட்சி அரசு வெளியேற்றியது தெரிந்ததே.

காரைநகரில் 50 வீடுகள் நிறுவப்படும்

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலுள்ள பூலோகன் காடு என்ற இடத்தில் சுய உதவி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 வீடுகளை விரைவில் நிறுவுவதற்கு யாழ். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை மெற்கொண்டு வருகின்றது.

இதன் பொருட்டு தனியாருக்குச் சொந்தமான 100 பரப்புக் காணி சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இந்த வீடமைப்புத் திட்டத்தில் வீடுகளை பெறுவதற்கு தகுதி வாய்ந்த 50 பேர்களை தமக்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்குமாறு யாழ். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர், வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா. திருநாவுக்கரசுவைக் கேட்டுள்ளார்.

இப்பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்கு சீ நோர் நிறுவனம் 50 ஆயிரம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. (க)

லண்டனிலுள்ள இலங்கையர் — மாதம் 2 ஆயிரம் ரூபாவை மனைவிக்குசெலுத்த உத்தரவு

ஜனதிபதி மூலம் தீர்ப்பு அறிவிப்பு

(மாவிட்டபுரம்)

இங்கிலாந்தில் வசிக்கும் ஒருவருக்கு, இலங்கையில் வசிக்கும், அவரால் கைவிடப்பட்ட அவர் மனைவிக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா தாபரிப்பாகச் செலுத்துமாறு மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த ஜெயசுலோசனு என்னும் பெண்மணி இங்கிலாந்தில் உள்ள தமது கணவர், தம்மைக் கைவிட்டுவிட்டதால் தாம் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரிவித்து, அவரிடமிருந்து மாதம் 3,500 ரூபா தாபரிப்புப் பணம் பெற்றுத் தருமாறு கோரி இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கு, பிரதிவாதி இல்லாமலேயே மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைசெய்யப்பட்டபோது இங்கிலாந்திலுள்ள பிரதிவாதியான சின்னத்தம்பி ஜோர்ஜ் நவரத்தினம் என்பவரை வாதிக்கு மாதம் 2 ஆயிரம் ரூபா தாபரிப்பாகச் செலுத்துமாறு நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி உத்தரவிட்டார்.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் பிரதிவாதி இல்லாமலேயே விசாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட இத்தீர்ப்பை ஜனதிபதிக்கு அனுப்பினுல் அதை அவர் இங்கிலாந்திலுள்ள இலங்கைத் தூதுவருக்கு அனுப்புவாரென்றும், தூதுவா மேற்படி பிரதிவாதியை அங்குள்ள நீதிமன்றம் ஒன்றில் ஆஜராகுமாறுசெய்து தீர்ப்பை ஏற்கும்படி பணிப்பாரெனவும் சுட்டிக்காட்டினுர். இதையடுத்து இத்தீர்ப்பை ஜனதிபதிக்கு அனுப்புமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (கு)

"பெரியார்களால் எமக்கு விமோசனம்"

(மாவிட்டபுரம்)

"சமயக் கருத்துக்களை மற்றவர்களுக்கு கூறுவதுடன் நின்றுவிடாது. தாமும் அவற்றைப் பின்பற்றி நடக்கும் சமயப் பெரியார்களால் தான் எமக்கு விமோசனம் கிடைக்க முடியும். அப்படியானவர்களில் ஒருவர் தான் சைவப் பெரியார். அமரர். மு. சிற்றம்பலம்".

இவ்வாறு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் இடம் பெற்ற சைவப்பெரியார் அமரர். மு. சிற்றம்பலத்தின் நினைவாஞ்சலிக் கூட்டத்தில் பேசிய வித்தியாசாலை ஆசிரியர் திரு. மு. பாலசுப்பிரமணியம் கூறினுர்.

அதிபர். திரு. சோ. சோமாஸ்கந்தமூர்த்தி ஐயர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பலர் உரையாற்றினுர்கள். (கு)

விவசாயப்போட்டி முடிவுகள்

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட விவசாயப் போட்டியின் முடிவுகள் வருமாறு.

'ஏ' தரப் பாடசாலைகள் கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, கரணவாய் மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

'பி' தரப்பாடசாலைகள் இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை கம்பர்மலை தமிழ்க்கலவன் பாடசாலை. [கு]

புத்தளத்தில் சங்காபிஷேகம்

(புத்தளம்)

புத்தளம் முந்தல் நகரிலுள்ள சருங்காலிச் சோலை வல்லீ தேவசேனு சமேத ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமிக்கு சென்றமாதம் மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து 25 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 2-ம் திகதி மண்டலாபிஷேக பூர்த்தியும் மஹாசங்காபிஷேகமும் மஹேஸ்வரபூஜையும் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு 'கலாநிதி'' சிவஸ்ரீ கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் ஆசியுடன் கொழும்பு கொட்டாஞ்சேனை ஸ்ரீமுத்து மாரிஅம்பாள் தேவஸ்தான பிரதமகுரு "கலாநிதி"சிவஸ்ரீ சாம்பசிவ ஷண்முகநாதக் குருக்கள் சங்காபிஷேகபிரதம குருவாகயிருந்து நடாத்தி வைப்பார்கள். (கு)

"ஈழநாடு" தேர்தல் போட்டி - பரிசளிப்பு வைபவம்

மணிவாக்கு

இறைவனை நாம் அனைவர்க்கும் தந்தையாக ஒப்புக்கொள்கிறோம். ஆனால் ஒவ்வொரு மனிதனையும் தமது சகோதரனாக நடத்தாது போயின் அதனால் நன்மை யாது?

— விவேகானந்தர்

மக்கள் கருத்து

உள்ளூர் உற்பத்தியை பெருக்க முடியுமா?

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளும், ஏழைத்தொழிலாளரும் அரசின் நாளாந்த விலைவாசி உயர்வினால் பெரிதும் பாதிப்படைகின்றனர்கள். தாராள இறக்குமதிக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இன்றைய அரசு, இனி இறக்குமதி செய்யமுடியாத அளவிற்கு வெளி நாட்டுச் செலாவணி விரையமாகிய பின்னர் சிக்கனத்தையும், தியாகத்தையும் பற்றி மேடைகளில் கூறுவது கேலிக்கூத்தான பேச்சாகும். இன்றைய அத்தியாவசிய உணவுப் பொருட்களான சீனி, மா, பாண் ஆகியவற்றின் திடீர் விலை உயர்வுகள் பெரும் வர்த்தகர்களையும், இறக்குமதி முகவர்களையும் மேலும் கைதூக்கி விடும் ஒரு நடவடிக்கையே அன்றி வேறொன்றுமில்லை.

எரிபொருள், மா, பாண் ஆகியவற்றிற்கு ஒரு மாதத்தில் இரண்டு முறை விலை ஏற்றி மக்களைத் திணறவைத்துள்ள இந்த அரசு, மேலும் போக்குவரத்து கட்டணங்கள், மற்றும் பொருட்களுக்கு விலை உயர்த்துவது தவிர்க்கமுடியாதது என வானொலியில் பிரசாரம் செய்கிறது.

நாடு பூராவும் வேண்டிய ஆடம்பரப் பொருட்களையும், மோட்டார் வாகனங்களையும், பிடவைகளையும் இறக்குமதி செய்து குவித்து வைத்துக் கொண்டு சாதாரண ஏழை மக்களிடம் தியாகம், உற்பத்தி அதிகரிப்பு என்று எல்லாம் அமைச்சர்கள் பேசுவது கண்டிக்கப்படவேண்டியதொன்றாகும். நகரங்களில் நவீன மார்க்கட்டுகளைக் கட்டி அவற்றில் இறக்குமதிப் பொருட்களை அடுக்கிவைத்துவிட்டு, உள்நாட்டு உற்பத்தியை பெருக்குவது என்பது முடியாதகாரியமாகும்.

திட்டமிடப்படாத பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுது வெளி நாடுகளின் அற்ப சொற்ப உதவிகளை நம்பியிருந்ததினால் இன்று மீள முடியாத ஓர் அபாய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்

இன்று துரித அபிவிருத்தி என்ற போர்வையில் பெருந்தொகையான வெளி நாட்டு செலாவணியை வீண் விரயமாக்கியும், அபிவிருத்திக்காக அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதினாலும் மட்டு நாட்டில் தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பது எனது கருத்தாகும்.

எஸ். கே. ஆறுமுகம்
விசுவமடு

"விலைவாசி உயர்வினால் மக்கள் அரைப்பட்டினி!"

எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"நாளுக்கு நாள் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வால் மக்கள் அரைப்பட்டினி கிடந்து சாகவேண்டிய நிலைக்கு உள்ளாகி வருகின்றனர். மாவினதும் பாணினதும் சீனியினதும் விலைவாசி உயர்ந்துள்ளதால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்."

அறவழிப்போராட்டக் குழுவினரால் யாழ். மாநகரசபை மண்டபத்தில் சமூக அநீதிகளுக்கு எதிரான அறவழி போராட்டம் என்ற தலைப்பில் நடாத்தப்பட்ட ஆய்வரங்கில் எதிர்க்கட்சித்தலைவர் திரு, அ. அமிர்தலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்

திரு. வி. சு. துரைராசா தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது சிகரட், சாராயம் பியர் போன்றவற்றின் விலைகளும் உயர்ந்துள்ளன. இப்பொருட்களின் விலை ஏற்றத்தால் மக்கள் அதிகம் பாதிக்கப்படமாட்டார்கள். சாராயம் குடிப்பதும் புகைப்பிடிப்பதும் நாகரீகம் என எண்ணிச்சிலர் தமது பணத்தையும் உடலையும் பழுதாக்கிக் கொண்டு வருகின்றனர். குடிப்பழக்கத்திற்கு அடிமையான பலர் வாழ்வில் எவ்வித லட்சியமும் குறிக்கோளுமின்றி வாழ்ந்து வருகின்ற பரிதாப நிலையினை இன்று சமுதாயத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

இன்று இங்கு இடம்பெறுகின்ற ஆய்வரங்கிலே சாதி ஒழிப்பு, சீதனஒழிப்பு, மது ஒழிப்பு அநீதிகள்ஒழிப்பு, கிராமிய நிர்மாணப்பணிகள் என்ற தலைப்புகளில் ஆய்வுகள் இடம் பெறுவது மிகவும் பெறுமதியானதாகும் இதில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை அறவழிப் போராட்டக் குழு நடைமுறைப்படுத்த வேண்டும் இதே போன்ற ஆய்வரங்குகளை வடக்குகிழக்கு மாகாணங்களின் பட்டிதொட்டி எங்கும் நடாத்தி மக்களுக்கு நல்ல சிந்தனைகளையும் நற்பழக்கங்களையும் ஊட்ட வேண்டுமெனவும் விரும்புகின்றேன்.

நான் இங்கு வருவதற்கு முன் யாழ் வைத்தியசாலைக்கு எனது சகபாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருடன் சென்று அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் பற்றிய ஆய்வினை வைத்தியர்களுடன் நடாத்தினேன். ஆனால் இங்கோ சமுதாயத்தில் நிலவுகின்ற குறைபாடுகளை எவ்வகையில் தீர்த்துக் கொள்ளலாம் என்பது பற்றிய ஆய்வு இடம் பெறுகின்றது இவ்வகைப்பட்ட ஆய்வரங்கு மிகவும் முக்கியத்துவம் பெற்றவையாகும்.

எமது தமிழ் சமுதாயத்தில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்குள் சில பிரச்சனைகள் எனக்கு முதிசமானதாக விளங்குகின்றன. சமுதாயத்தில் புரையோடிப்போயிருக்கும் இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வுகள் காணப்படவேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானதாகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதன் மூலம் எமது இனவிடுதலைப் போராட்டம் முன்னேற்றம் பெற்றதாகும்.

1956-ம் ஆண்டின் பின் தமிழ் மக்கள்மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்பட்டது அதன் பின்னர் தான் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு அறவழியில் தீர்வுகாண முடியும் என மக்கள் நம்பினர் இதே ரீதியில் அறவழியில் பெரு நம்பிக்கை கொண்டு தமிழ்பேசும் மக்கள் மத்தியில் நல்ல முறையில் இயங்கிவருகின்ற அறவழிப் போராட்டக்குழுவின் இம் முயற்சியினை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது.

(கொ)

இந்திய இடைக்காலத் தோதலையொட்டி உங்கள் ஏடு— "ஈழநாடு" நடத்திய தேர்தல் போட்டியின், பரிசளிப்பு வைபவக் காட்சிகளையே இங்கு நீங்கள் காணுகின்றீர்கள். பாடசாலை மாணவன் முதல் வயதில் மூத்தவர்கள் வரை பலதரப்பட்ட வயதினரும், பல துறைகளில் வேலை பார்ப்பவர்களும் அகமும் முகமும் மலர ரொக்கப் பரிசுகளையும் மற்றும் நாலாயிரம் ரூபா பெறுமதியான கவர்ச்சிமிகு பரிசுகளையும் பெற்றுக் கொண்ட காட்சி, இனிய காட்சியாக இடம் பெற்றிருந்தது. பரிசளிப்பு வைபவத்துக்கு "ஈழநாடு" நிறுவன பொது முகாமையாளர் திரு. து. சீனிவாசகம் தலைமைவகித்தார். முதலாவது பரிசு பெறும் மாணவன் ராமசங்கரன் தனது பரிசை பொது முகாமையாளரிடமிருந்து பெறுவதை மூன்றுவது படத்திலும், பரிசு பெற்ற முப்பதுபேரும்; "ஈழநாடு" பொதுமுகாமையாளர்; இயக்குநர் மற்றும் அலுவலக ஊழியர்கள் சிலருடன் சேர்ந்து நிற்பதை நான்காவது படத்திலும் நீங்கள் காணலாம்.

இலங்கை வங்கி யாழ். கிளையின்

சர்வதேசப் பிரிவு

வாடிக்கையாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணக் கிளையில் இன்று சர்வதேசப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படுகின்றது. இலங்கையில் கண்டியில் மட்டுமே இதற்கு முன் ஒரு சர்வதேசக் கிளை அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கிளையாக யாழ்ப்பாணக் கிளை அமைகின்றது.

கடந்தமாதம் இலங்கை வங்கித் தலைவர் திரு, நிசங்கா விஜயவர்த்தன யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தபோது விரைவில் யாழ்ப்பாணத்தில் ஒரு சர்வதேசப் பிரிவினை நிறுவுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று வங்கி வாடிக்கையாளர்களுக்கு உறுதியளித்திருந்தார். அவ்வாக்குறுதிஇன்று நிறைவேறுவது கண்டு யாழ். பொதுமக்கள், வர்த்தகர்கள் இறக்குமதியாளர்கள் ஆகியோர் பெரிதும் மகிழ்வடைகின்றனர்.

இன்றுகாலை 9 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் திறக்கப்படவுள்ள இச்சர்வதேச வங்கியின் பணிகள் பன்முகப்படுத்தப்பட்டதாகும்.

இதுவரை காலமும்இலங்கை வங்கி யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் தேவைகளுக்குரிய ஏற்றுமதி இறக்குமதித் தேவைகளைத் தனது தலைமை அலுவலகத்தில் இருக்கும் சர்வதேசப் பிரிவு மூலமாகவே அளித்துவந்தது. இதனால் எமது வாடிக்கையாளர்கள் தமது தேவைகளை மிகவும் காலதாமதத்துடனும், பல்வேறு கஷ்டங்களுடனுமே பூர்த்தி செய்துகொள்ளவேண்டியநிலையிலிருந்தனர். ஆனால் இன்று நிறுவப்படும் இப்பிரிவினால் மேற்கூறப்பட்ட தாமதங்களும் கஷ்டங்களும் நிவிர்த்தி செய்யப்படும்.

தற்போதைய அரசாங்கம் கடைப்பிடித்துவரும் இறக்குமதிக்கொள்கை காரணமாகவும் எமது வர்த்தகர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையத்தக்கதாகவே இப்பிரிவு அமையும். எமது வர்த்தக வாடிக்கையாளர்களுக்கும், கைத்தொழிலாளர்களின் தேவைகளுக்கும்உடனுக்குடன் உதவுவதற்கு இப்பிரிவு பெரிதும் உதவியாக இருக்கும்

இச்சர்வதேசப் பிரிவின் நோக்கங்கள் பின்வருமாறு;

இறக்குமதிக்குத் தேவையான நாணயக் கடிதங்களைத் திறத்தல்.

நேரடியாகவே வெளிநாட்டு விநியோகஸ்தர்களுக்கு விநியோகம்பற்றி அறிவித்தல்,

இறக்குமதி - கப்பல் தஸ்தாவேஜுகளை நேரடியாகவே யாழ்.இலங்கை வங்கியின் சர்வதேசப் பிரிவுக்குக் கிடைக்கும்படி செய்யமுடியும்.

நம்பிக்கைப்பத்திரக் கடன் வசதிகள் இப்பிரிவினால் செய்து கொடுக்கப்படும். இறக்குமதியாளர்களுக்கு அடைவுமுறைக் கடன்களும் செய்துகொடுக்கப்படும்.

அரசினது கட்டுப்பாடற்ற இறக்குமதிக் கொள்கைகளுக்கிணங்க யாழ். பிரதேசத்தில் உள்ள கைத்தொழில், வர்த்தக, இறக்குமதியாள அதிபர்களுக்குக் கஷ்டமின்றி இங்கேயே சகலவிதமான ஆலோசனைகளையும் கொடுப்பதற்காகவும் இப்பிரிவு செயல்படும்,

தாமதப்படுத்தல்— பிற்போடல்கள் தவிர்க்கப்படும். இலகுவான—சுமுகத் தொடர்புகளுடன் வர்த்தகர்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு உதவியாக இப்பிரிவு அமையும்.

இறக்குமதி நிதியுதவி இங்கேயே அளிக்கப்படும்.

முன்னேக்கிய செலாவணி ஒப்பந்தங்கள், கப்பல் உத்தரவாதங்களை அளித்தல் என்பன போன்றனவும் மேற்கொள்ளப்படும்.

வெளிநாட்டு உண்டியல்களை வழங்குதல்.

யாழ். கைத்தொழில் இறக்குமதியாளர்களுக்கும் மாகாணரீதியில் மக்கள் நலன்கருதியும் செயற்படவுள்ள இச்சர்வதேச வங்கிப்பிரிவு சகலவிதமான கைத்தொழிலாளருக்கும் இறக்குமதியாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் பெரிதும் உதவியாக அமையும் என்பது திண்ணம்.

இச்சர்வதேசப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரியாக திரு. இ. வில்வராஜா இருப்பார்

சர்வதேசப் பிரிவு திறம்படச் செயலாற்றுவதற்காக இலங்கையின் வடபிராந்திய முகாமையாளர் திரு என். ஜே. ஜெகநாதனும், மாவட்ட முகாமையாளர் திரு. ரி. கே. குணநாயகமும், யாழ். வங்கி இணைப்பு முகாமையாளர் திரு. சிவலிங்கமும், சர்வதேசப்பிரிவுக்கிளையின் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையாற்றும் திரு, ஆ. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் செயலாற்றி வருகின்றார்கள்.

இன்று கொழும்பிலிருந்து வங்கியாளர் (உயர் அதிகாரிகள்) குழுவொன்று யாழ்ப்பாணம் வருகின்றது. (நா)

பரியாரி இராசசேகரம்

மலர்ந்த முகம், பெருமை-சிறுமை, ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றி, சமூகத்தில் சகல பிரிவினரையும் சமமாகவே மதித்துத் தன்னலமற்ற சேவையாற்றிய சேவையுணர்வு, யார் எது வந்து கேட்டாலும் இல்லையென்று கூறாது செய்துகொடுக்கின்ற பெருமனது, தாம் எடுத்துக்கொண்ட காரியத்தினைத் திறம்படச் செய்துமுடிக்கின்ற செயல்திறன், கொண்ட கொள்கையினின்றும் சிறிதும் வழுவாத தன்மை. பொதுமக்களிடையே ஏற்படுகின்ற எத்தகைய பிணக்கானாலும் அவற்றினை மிகவும் சாதுர்யமாகத் தீர்த்துவைக்கும் திறமை ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று விளங்கியவர்தான் காரைநகர், புதுறோட்டில் வாழ்ந்து அண்மையில் இறையடி சேர்ந்துவிட்ட சமாதான நீதவானும், ஆயுள்வேத வைத்தியரும், இறப்பு, பிறப்புப் பதிவாளருமாகிய சு. இராசசேகரம் அவர்கள்,

பரியாரி இராசசேகரம் என்று கூறினால் காரைநகரிலே அறியாதவர்கள் எவரும் இருக்கமுடியாதென்று கூறுமளவிற்கு, அவர் தமது சேவைகள் வாயிலாகச் சமூகத்தின் சகல பிரிவு மக்கள் மனதிலும் நீங்காத இடத்தைப் பெற்று விளங்கினார். அவர் தமது பரம்பரைத் தொழிலாகிய ஆயுள்வேத மருத்துவத்துறையில் நிபுணராக விளங்கி வசதியற்ற மக்களுக்கு எந்தப் பிரதியுபகாரத்தையும் எதிர்பாராது, சிகிச்சையளித்து வந்த தாராளச் சிந்தை படைத்த பெருமகன்.

காரைநகரில் இவர் அங்கம் வகிக்காத சமய, சமூக சேவை ஸ்தாபனங்கள் இல்லையென்றே கூறலாம். இந்த ஸ்தாபனங்கள் வாயிலாகக் கிராமத்திற்கும், மக்களுக்கும் ஆற்றிய சேவைகள் ஏராளம். நீண்டகாலமாகக் காரைநகர்க் கிராமசபை உறுப்பினராகவும், பின்னர் அதன் உபதலைவராகவும் இருந்து, கிராமத்தின் வளர்ச்சியில் காட்டிய அக்கறையும், காரைநகர்ச் சைவ மகாசபை, காரைநகர் மணிவாசகர் சபை, காரைநகர்ச் சிவன்கோவில் அன்னதானச் சபை, காரைநகர்க் கிராமசபை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றில் பொறுப்பு மிக்க பதவிகளை ஏற்று, அவற்றின் வாயிலாக ஆற்றிய பணிகளும் குறிப்பிடத்தக்கன. அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

க. சிவகுமாரன்
செயலாளர்
மணிவாசகர்சபை.

'சி. ஐ. ஏ.' உளவு வேலைகளை அம்பலப்படுத்தும் புதிய நூல்!

நியூயோர்க், பெப். 27

'கழிசடை வேலை' என்ற பெயரில் சி. ஐ. ஏ. உளவு ஸ்தாபனத்தை அம்பலப்படுத்தும் நூலொன்று வெளிவந்துள்ளது.

நோபல் பரிசுபெற்ற அயர்லாந்து வாசி, ஷொன்மக் பிரைட் தலைமையில் அமெரிக்க, கனேடிய, மேற்கு ஐரோப்பிய அறிஞர்கள் இதை வெளியிட்டுள்ளனர். (தஹ்ரான் பணயக் கைதிகள் பிரச்னை சம்பந்தமாக ஈரான் அரசுடன் மக்பிரைட் சமீபத்தில் சம்பாஷணை நடத்தியது தெரிந்ததே.)

புதிய நூலைத் தயாரிப்பதில் முன்னாள் சி. ஐ. ஏ. ஊழியரும், இன்று அந்த ஸ்தாபனத்தை அம்பலப்படுத்துவதில் பல நூல்களை எழுதியுள்ளவருமான திரு. ஃபிலிப் ஏஜி இக்குழுவுக்கு உதவியுள்ளார்.

சி. ஐ. ஏ. கட்டுப்பாட்டைத் தளர்த்த அமெரிக்க அரசு நடவடிக்கை, எடுத்து வரும் கட்டத்தில் இந்நூல் சி. ஐ ஏ. சதிகளை மேலும் அம்பலப்படுத்தியுள்ளது. நூல் வெளியிடுவதைத் தடுக்க நீதி இலாகா முயற்சித்தபோதிலும் அதற்கு முன்னரே இது பிரசுரமாகிவிட்டது.

அங்கோலா, சிலி, ஸயர், உகண்டா, அல் ஜீரியா, மொரோக்கோ, கென்யா, ரொடீஷியா, தென்னாபிரிக்கா முதலிய நாடுகளில் சி. ஐ. ஏ. நடத்திய சதிகள் ஐ. நா.வில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. நூல் பிரசுரித்துள்ள தகவலின் பிரகாரம், ஆபிரிக்காவில் 'கவிழ்ப்பு வேலை'களுக்கு மாத்திரம் சி. ஐ. ஏ.க்கு வருடத்திற்கு இரண்டரைக்கோடி முதல் மூன்று கோடி டாலர் ஒதுக்கப்படுவதாக நூல் கூறுகிறது.

தெற்கு ஆபிரிக்காவில் 'சி. ஐ. ஏ'யின் செயல்கள் கூலிப்படைகளை ரொடீஷியாவுக்கு அனுப்புதல், தென்னாபிரிக்காவுக்கு அணுகுண்டு இரகசியங்களை வழங்குதல் போன்ற விஷயங்களும் நூலில் இடம்பெற்றுள்ளன. கானா ஜனாதிபதி குவாமே என்குறுமா பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டதற்குப் பின்னால் 'சி. ஐ ஏ.' இருந்தது என்ற விபரமும் நூலில் இடம்பெற்றுள்ளது.

காசி எம். எம். சுல்தான் மண்டபம்

நிதிக்குழு சிபார்சு மறுபரிசீலனை!

(யாழ்ப்பாணம்)

யாழ். பொதுசன நூலக உடனுதவும் பகுதி மண்டபத்திற்கு காதி எம். எம். சுல்தான் மண்டபம் என்று பெயரிடவேண்டும் என நிதிக்குழு செய்த சிபார்சை மறுபரிசீலனை செய்வதற்கு மராமத்து குழுவிற்கு விடுவதென யாழ். மாநகரசபை தீர்மானித்துள்ளது.

யாழ். நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நேற்று நடந்த கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் முதல் முஸ்லிம் மேயராக இருந்து யாழ்ப்பாண மக்களுக்கு அளப்பரிய சேவை செய்த பெரியார் காதி எம். எம். சுல்தானின் பெயரை பொதுசன நூலகத்தில் உள்ள உடனுதவும் பகுதி மண்டபத்திற்கு 'காதி எம். எம். சுல்தான் மண்டபம்' என்று பெயர் சூட்டவேண்டும் என சபை உறுப்பினர் ஜனாப் மீ. மு. காசிம் (தமிழ்க்காங்கிரஸ்) சமர்ப்பித்த கோரிக்கை நிதிக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

நேற்று நடந்த சபைக் கூட்டத்தில் நிதிக்குழு அறிக்கைகள் ஆலோசிக்கப்பட்டபோது திரு. ஏ. துரைராஜசிங்கம் (கூட்டணி) இதனை ஆட்சேபித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறினார்.

திரு. ஏ, துரைராசசிங்கம் கூறியதாவது: அமரர் சாம் சபாபதி முதல்மேயராக இருந்தார். நூல் நிலையத்துடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. நூல்நிலைய மண்டபமொன்றிற்கு அவர் பெயர் சூட்டியதில்தவறில்லை. அவர் நூல்நிலையத்தைக் கட்டி முடித்தார். ஆனால் இத்தீர்மானத்தை ஆலோசித்துச் செய்ய வேண்டும்.

ஜனாப் காசிம்; (த. கா) இதனை ஏன் ஆட்சேபிக்கிறீர்கள்?

திரு. ஏ. துரைராஜசிங்கம்: (கூட்டணி) நூல்நிலையத்திற்கும் அமரர் சுல்தானுக்கும் எவ்வித தொடர்புமில்லை.

ஜனாப் காசிம்: (த கா) நாங்கள் அவருக்கு சிலை எழுப்பவோ மண்டபம்கட்டச்சொல்லியோ கேட்கவில்லை. மண்டபத்திற்கு பெயரை மட்டும் சூட்டுமாறு கேட்கிறோம்.

திரு. துரைராஜசிங்கம் (கூட்டணி) நூல்நிலையத்திற்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை, இன்னும் பல மேயர்கள் இருக்கிறார்கள், அவர்களின் பெயர்களும் சூட்ட வேண்டிவரும். ஆதலால் மறுபரிசீலனை செய்யவேண்டும்.

இச்சிபார்சை மறுபரிசீலனை செய்வதற்கு மராமத்துக் குழுவிற்கு விடுவதென சபை தீர்மானித்தது. (க)

இளைஞருக்குப் பயிற்சி

(நெல்லியடி)

அச்சுவேலி வடக்கிலுள்ள சிறுகைத்தொழில் அபிவிருத்திக்கழகம் வேலையற்ற இளைஞர்களுக்கு புற்பாய் தயாரித்தல் பற்றிய பயிற்சிகளை அளிக்கவுள்ளது.

படித்த வேலையற்ற யுவதிகள் சுமார் 60 பேருக்கு தையல் பயிற்சி அளிக்கும் மேற்படி கழகம் மாட்டுப் பண்ணையொன்றையும் நிறுவவுள்ளது. (கு)

புதிய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்[

அராலி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் சனசமூக நிலையம் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. சி. யோகராசா உபதலைவர் செல்வி. ப. கணபதிப்பிள்ளை செயலாளர் சி. ஜெகதீஸ்வரன் உபசெயலாளர் ந. பாலசுப்பிரமணியம் பொருளாளர் மு. சின்னையா கணக்குப் பரிசோதகர் சி. யோகராசா

நிர்வாகசபை உறுப்பினர்களாக 10 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

விசேட ஆணையாளர்

(பண்டத்தரிப்பு)

அராலிக் கிராமசபையின் விசேட ஆணையாளராக வலிகாமம் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. செந்தில்வடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தன்னலம் கருதாத இராசா

பொக்கைவாய். ஆனாலும் கொஞ்சும் சிரிப்பு; சுருக்கம் விழுந்த மேனி. ஆனாலும் சிவப்பின் கவர்ச்சி; வயதின் முதிர்ச்சி, ஆனாலும் இளமையின் குதிப்பு; நரைதான். ஆனால் மூப்பின் தளர்ச்சியில்லை; பேச்சில் ஆங்கிலமும், தமிழும் சரளம். எப்போதுமே அண்டை, அயல், கிராமம், நாடு, உலகம்பற்றியதியானம். 'சின்னன் பொன்னன்' என்றில்லை - எல்லாருடனும் சகஜ உறவுதான். எப்பொழுதாவது கவலைப்பட்டாரோ தெரியவில்லை. கண்ட நேரமெல்லாம் களிப்போடுதான் காணப்பட்டார். கைநிறையக் கொழுத்த பென்ஷன். 5 ஆண் மகன், 4 பெண் பிள்ளைகள், 2 பேரர், 2 பூட்டிகள், 92 வயதுவரை குறையில்லா வாழ்வு - எந்த மனிதன் இவற்றுக்குமேல் பேராசைப்படுவான்? அதனால் தான்போலும் ஊரெழு வ. இராசா என்றும் பொலிவோடு உலவினார்.

அவருடைய இளமையை உறிஞ்சியது மலாயா. ஆனால் அவருடைய பிற்கால அமைதியான வாழ்க்கைக்கு ஈடுகொடுத்ததும் அந்நாடே. 14 வயதில் அங்கு புகையிரத திணைக்களத்தில் உத்தியோகமான அவர், 26 வது வயதில் தங்கம்மாவைக் கைப்பிடிக்க இலங்கைக்கு ஒரு தடவை வந்து போனதுமட்டும்தான். அதைத் தவிர 1944ல் தன்னுடைய 55 வது வயதில்; ஓய்வு பெறும்வரை உழைப்பு, உழைப்பு, கடின உழைப்புத்தான். வெள்ளைக்காரத்துரைகளின் பிரத்தியேகமான உயர் பதவிவரை உயர்ந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சாம்ராச்சிய சேவை விருதைப் பெற்றார். ஜப்பானிய ஆதிக்கத்தில் மலாயா இருந்தபோதும் அவ்வுயர் பதவியை நிர்வகித்தார். இவரின் உழைப்பு, விசுவாசம், நேர்மை, கடமையுணர்வு, பாரபட்சமின்மை ஆகியவற்றுக்கு வேறு நற்சான்றுகளும் வேண்டுமோ?

இலங்கைக்குத் திரும்பிவந்த ஊரெழு ஸ்ரீகணேச வித்தியாசாலை முகாமையாளராகச் சில காலம் கடமையாற்றினார். நீர்வேலி கிராமசபை உறுப்பினராகப் பல்லாண்டு காலமும் அதன் தலைவராக 1935-1960லும் பணிபுரிந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக ஊரெழு வீரகத்திப்பிள்ளையார் கோயில் முகாமையாளராக இறுதி மூச்சுவரை சிறப்புற நிர்வகித்தார். ஓய்வு பெற்றும் மேலும் 30 ஆண்டுகளாக ஊதியமற்ற உழைப்பு- அல்ல தன்னலம் கருதாப் பொதுநல சேவை.

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஊரெழுவில் இராசா என்றொருவர் வாழ்ந்தார். இனி அவரைப்போல் வேறு யார்? இப்போது அவருக்குக் கிடைத்திருப்பது நிரந்தர நிம்மதி-சாந்தி.

----விஜி

விற்பனையாகிறது !

ரௌத்திரி வருஷ 1980 - 81

இரகுநாதையர் வாக்கியபஞ்சாங்கம்

விலை; ரூபா 7-90

விபரங்களுக்கு

சோதிடவிலாச புத்தகசாலை
46, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல. 8083

சோதிடபரிபாலனமடம்
கொக்குவில்.

5063

''தலைவர் ஜி. ஜி., தந்தை செல்வா, அமரர் 'திரு'

ஞாபகார்த்த முத்திரை வெளியிட வேண்டும்''

யாழ்.மாநகரசபை அரசைக்கோரும்தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்திற்கு ஞாபகார்த்த முத்திரை வெளியிடவேண்டும் என்று அரசைக் கோரும் தீர்மானம் யாழ்ப்பாணம் மாநகர சபையில் பலத்த விவாதத்தின் பின் ஏகமனதாக நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து தமிழ் தலைவர்களான அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அமரர் திருச்செல்வம் ஆகியோருக்கு தனித்தனியே முத்திரைகள் வெளியிட வேண்டும் என அரசைக் கோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டம் நகர முதல்வர் திரு. இராசாவிஸ்வநாதன் தலைமையில் நேற்றுக் காலை ஆரம்பமானது.

அமரர் ஜி. ஜி. க்கு முத்திரை

திரு. இ. மரியாம்பிள்ளை (தமிழ்க் காங்கிரஸ்) கீழ்க்காணும் பிரேரணையை கொண்டுவந்தார். தமிழ்பேசும் இனத்தின் தன்னிகரற்ற மூத்த தலைவரும் உறங்கிக் கிடந்த தமிழினத்திற்கு முதன் முதல் இன உணர்ச்சியை ஊட்டித் தட்டி எழுப்பிய ஒப்பற்ற தலைவரும், சர்வதேச அரசியல் சட்டமாமேதையும் தமிழினத்தின் மானம் காத்தவரும், நீண்டகாலம் சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் தொடர்ச்சியாக அங்கம் வகித்தவரும், அமைச்சராக இருந்து தமிழர் பிரதேசம் வளம் கொழிக்க தொழிற்சாலைகள் பல நிறுவியவரும் கடற்றொழிலாளர் நிலையை உயர்த்திட மீன்பிடித்தொழிலை நவீனமயமாக்கியவரும் ஒரு நாட்டிற்குத் தலைமைதாங்கி ஐ. நா. சபைக்கு சென்ற உலகத்தின் முதல் தமிழனும் அங்கு சங்கத் தமிழ் இலக்கியப் பாடலான ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் பாடலை எடுத்துரைத்தவரும், இலங்கையின் தேசியக்கொடியில் தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் குறித்த இரண்டு நிறங்களைப் பெற்றுக்கொடுத்தவரும் 20-ம் நூற்றுண்டின் தலைசிறந்த அரசியல் தீர்க்கதரிசியுமாகிய அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தை கௌரவிக்குமுகமாக, அவரின் ஞாபகார்த்தமாக முத்திரைவெளியிடவேண்டுமென மேன்மை தங்கிய ஜனாதிபதியையும். அரசையும் இச்சபை கேட்டுக் கொள்கிறது.

திருமதி. சுவாமிநாதர் (தமிழ்க் காங்கிரஸ்) இப்பிரேரணையை அனுமதித்தார்.

மேயரின் திருத்தப்பிரேரணை

நகரமுதல்வர்: இதற்கு திருத்தப் பிரேரணையொன்று கொண்டுவருகின்றேன். தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமிழ் உணர்ச்சியை ட்ரயல் அட்பார் வழக்கு மூலம் கொண்டுவந்து அவ்வழக்கில் தமிழினத்தின் வரலாற்றை சட்டரீதியாக எடுத்துக் கூறி தமிழ் ஈழத்தில் மீண்டும் உரிமையை நிலைநாட்ட வாதாடிய அமரர்களான ஜி. ஜி. பொன்னம்பலம், எஸ். ஜே. வி. செல்வநாயகம். எஸ். திருச்செல்வம் ஆகிய மூவருக்கும் சேர்த்து நினைவு முத்திரை வெளியிடுவதென்றுதபால் அமைச்சரை இச்சபை கேட்டுக்கொள்கிறது.

திருமதி. சுவாமிநாதர் (தமிழ்க் காங்கிரஸ்) தலைவர்களான அமரர் செல்வநாயகம், அமரர் திருச்செல்வம் ஆகியோருக்கு முத்திரைவெளியிடுமாறு தனித்தனியான தீர்மானம்போட்டு கேட்கலாம். இந்தப் பிரேரணை தனியாக இருக்கவேண்டும்.

திரு. மரியாம்பிள்ளை (த.கா.) தலைவர் ஜி. ஜி.க்கு முத்திரை வெளியிடவேண்டும் என்ற அபிலாசையினுல் இப் பிரேரணை கொண்டுவந்தேன். தந்தை செல்வா, அமரர் திருச்செல்வத்திற்கும்முத்திரை வெளியிட தனித்தனி பிரேரணை கொண்டுவந்தால் அதனை ஏற்றுக்கொள்கிறேன். திருத்தப் பிரேரணைக்கு சம்மதிக்கவில்லை. என் பிரேரணையை சபை ஏற்கட்டும் அல்லது நிராகரிக்கட்டும்.

நகர முதல்வர்: அமரர் ஜி. ஜி.க்கு முத்திரை வெளியிடும் உங்கள் அபிலாசைக்கு எந்த விதத்திலும் மாறில்லை. அமரர் ஜி.ஜி.க்கு முத்திரை வெளியிடும்போது தமிழினத்தின் விடுதலைக்குப் பாடுபட்ட மூன்று தலைவர்களுக்கும் சேர்த்து வெளியிடவேண்டும்.

திருமதி சாமிநாதர்:(த.கா) தனித்தனியாக வெளியிட வேண்டும்.

ஜனுப் காசிம்: (த. கா.) நாங்கள் அமரர் ஜி. ஜி.க்கு நினைவு முத்திரை வெளியிட தீர்மானம் கொண்டுவந்தபின் தானே நீங்கள் மற்றைய தலைவர்கள்பற்றி சிந்திக்கிறீர்கள். விரும்பினுல் நீங்கள் தந்தை செல்வா, அமரர் திருச்செல்வம் ஆகியோருக்கு நினைவு முத்திரை வெளியிட தீர்மானம் கொண்டுவந்திருக்கலாமே

திரு. எட்வேட் (கூட்டணி) நாங்கள் கூட்டணி உறுப்பினர்கள் தீர்மானமொன்றை நிறைவேற்றக் கூடிய பலம் எங்களிடம் உண்டு. கடந்த நான்கு மாதங்களுக்கு முன் பெயர் மாற்றுவது, சிலை வைப்பதுபோன்ற தீர்மானங்களை 6மாதம் பின்போட தீர்மானித்தோம் ஏற்கனவே அமரர் ஜி. ஜி. பெயர் மாற்றம் கொண்டுவரப்பட்டு பின் போடப்பட்டது.

இன்று ஒரு பிரேரணை வந்துள்ளது. இதன் திருத்தப் பிரேரணையை ஏற்கிறேன்.

சம்மதம் வேண்டும்

டாக்டர் ஏபிரகாம்:(த. கா) எவராவது திருத்தப்பிரேரணை கொண்டுவர வேண்டுமானுல் பிரேரணை கொண்டுவந்தவரின் சம்மதத்துடன்தான கொண்டு வரவேண்டும். அவர் மறுத்தால் கொண்டுவர முடியாது. சிலர் ஏற்கலாம், சிலர் விடலாம். பிரேரணை கொண்டு வந்தவரின் விருப்பம் வேண்டும் வாக்கெடுப்பிற்கு விடுங்கள்.

திரு. என். ரி. செல்லத்துரை (கூட்டணி) தமிழ்பேசும் தலைவர் ஜி.ஜி.யை மதிக்கிறோம். மூத்த தலைவராககருதுகிறோம். அவருக்கு முத்திரை வெளியிட வேண்டும். ட்ரயல் அட் பார் வழக்கில் அமரர் ஜி. ஜி.யுடன் தந்தை செல்வா, அமரர் திருச்செல்வம் இணைந்து 3 பேரும் வழக்கை நடத்திய போது சிங்களத் தலைவர்களே வியந்தார்கள். 3 தலைவரையும் ஏற்றுக் கொண்ட இந்தச் சபை தனித்து அவர்களுக்கும் முத்திரை வெளியிடக் கோராமல் சேர்த்து வெளியிடுமாறு கேட்டால் என்ன? நாங்கள் பெரும்பான்மையாக இருக்கிறோம்.

முதுபெரும் தலைவரான ஜி. ஜியை எங்கள் தலைவராக ஏற்றுக்கொள்கிறோம். வட்டுக்கோட்டை மாநாட்டில், அமரர் ஜி. ஜி. முதல் தலைவராகவும், தந்தை செல்வா அடுத்த தலைவராகவும், திரு. தொண்டமானையும் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள்.

தமிழர் ஒற்றுமைக்கு

தமிழர் ஒற்றுமைக்காக அமரர் ஜி. ஜி. யும் தந்தை செல்வாவும், ஒன்றிணைந்தார்கள். அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் வீட்டிற்கு தந்தை செல்வாவும் மற்றும் கூட்டணித் தலைவர்களும் சென்று அவரைச் சந்தித்த பின் கூட்டணி உருவாக்கப்பட்டது. இனியாவது ஒன்று சேர்ந்து விடுதலைக்காக உழைப்போம் என கூட்டணியை உருவாக்கினுர்கள், சில கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் 3 தலைவர்களுக்கும் சேர்த்து முத்திரை வெளியிட ஏகமனதாக தீர்மானிக்க வேண்டும்.

திரு. யோ. அ. செல்வநாயகம் (கூட்டணி) அமரர் ஜி. ஜி. யைக் கௌரவிக்கிறோம். அவர் விட்டுச்சென்ற பணியை நிறைவேற்ற வேண்டும். 1952ம் ஆண்டு முதல், தமிழினம் ஒற்றுமைபட வேண்டும், கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்று அவர் பாடுபட்டு வந்தார் இறக்கும் போதும் கூட்டணியை உருவாக்கிவிட்டு அமரராகி விட்டார். இரண்டு கட்சிகளும் சேர்ந்து கூட்டணி உருவானது. இன்று ஒன்று பிரிவினையையும் மற்றது ஒற்றுமையையும் நாடுகிறது

அறிஞர் அண்ணு உருவாக்கிய கட்சி இரண்டாகப் பிரிந்ததனுல் அங்கு பயங்கர நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆதலால் மூவருக்கும் சேர்த்து முத்திரை வெளியிட வேண்டும் என்ற திருத்தப் பிரேரணையை ஏற்றுக் கொள்கிறேன்.

திரு. ஏ. துரைராஜசிங்கம் (கூட்டணி). இப்பிரேரணை கொண்டு வந்தவரின் சம்மதத்துடனேயே திருத்தப் பிரேரணை கொண்டு வரலாம். அவர் சம்மதிக்காவிடில் கொண்டு வர முடியாது.

எங்கள் [illegible] தலைவர் ஜி. ஜி.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் இன்று கூட்டணி தலைவராக இருக்கிறுர். தமிழ் காங்கிரசில் நீண்டகாலம் உழைத்தவர் இன்று நகர முதல்வராக இருக்கிறுர். எங்கள் தலைவர் ஜி. ஜி. தான் என ஏற்றுக் கொள்கிறோம்.

பிரேரணை கொண்டுவந்தவர் திருத்தத்துக்கு ஆதரிக்காவிட்டாலும் அவரின் பிரேரணையை நாங்கள் ஆதரிப்போம் ஏனெனில் அமரர் ஜி. ஜி. யை எங்கள் தலைவராக ஏற்கிறோம். தந்தை செல்வநாயகத்தை தலைவராக ஏற்க ஏன் நீங்கள் [திரு மரியாம்பிள்ளையைப் பார்த்து] மறுக்கிறீர்கள்?

கூட்டணி உறுப்பினர்கள் 15 பேரும் எதிராக வாக்களித்து பெரும் தலைவர் ஜி.ஜி. க்கு அவமானம் ஏற்படுத்த விரும்பவில்லை. தமிழன் விடுதலைக்காக குரல் கொடுத்த தந்தை செல்வா அமரர் திருச்செல்வத்துக்கு சேர்த்து முத்திரை வெளியிட சம்மதியுங்கள் நாங்கள் எல்லாவற்றிலும் ஒத்துழைக்க தயாராக இருக்கிறோம். அமரர் ஜி. ஜி.க்கு மணிமண்டபம் கட்டுவதிலும் ஒத்துழைப்போம்.

கூட்டணியின் முதல் தலைவர்

அமரர் ஜி. ஜி. தான் கூட்டணியின் முதல் தலைவர் என்பதை ஏற்கிறோம் இரண்டாவது தலைவர் தான் தந்தை செல்வா மூன்றாவது அமரர் திருச்செல்வம் ஆதலால் தனித்தனியாக தீர்மானம் போடாமல் மூன்று பேருக்கும் சேர்த்து முத்திரை வெளியிட தீர்மானிப்போம்.

நகரமுதல்வர்: கடைசி நேரத்தில ஒற்றுமைக்காக பாடுபட்ட தலைவர்கள் மூவரும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை ஏற்றவர்கள் தலைவருக்கு மதிப்பு கொடுத்து கடைசி நேரத்தில் அவர் எதனை விரும்பினுரோ அந்த ஒற்றுமைப்படி திருத்த பிரேரணையை ஆதரிப்போம்.

திருமதி அந்தோனியசுவாமிநாதர். (த-கா)

இப்பிரேரணையில் ட்ரயல் அட்பார் வழக்கு பற்றி எதுவும் கூறப்படவில்லை. ஐ.நா. சபைக்கு தலைவர் ஜி. ஜி. சென்றதைத்தான் நினைவூட்டியிருக்கின்றுர். 3 தலைவர்களுக்கும் தனித்தனியாக முத்திரை வெளியிட கோரவேண்டும். தந்தை செல்வாவுக்கும் அமரர் திருச்செல்வத்துக்கும் முத்திரை வெளியிட வேண்டும் என நானே சபையின் அனுமதியுடன் பிரேரணை கொண்டு வருகின்றேன. முதலில் அமரர் ஜி. ஜி. க்கு முத்திரை வெளியிடும் தீர்மானம் நிறைவேறட்டும் அதனை தொடர்ந்து மற்றும் தலைவர்களுக்கும் முத்திரை தனித்தனியாக வெளியிட வேண்டும் என நான் பிரேரணை கொண்டு வருகிறேன்.

பாற் கஞ்சி விநியோகம்

(மல்லாகம்)

மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை அபிவிருத்திச் சங்க ஆதரவின் கீழ் வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவனுல் பாற்கஞ்சி விநியோகம் அண்மையில் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (கு)

நகர முதல்வர்: பொதுப் பிரேரணையாக கொண்டு வருகிறீர்களா?

திருமதி சுவாமிநாதர்: (த. கா) முதல் பிரேரணை நிறைவேறியபின் சபையின் அனுமதியுடன், இரண்டாவது பிரேரணையாகப் பிரேரிக்கிறேன்.

திரு. என். ரி. செல்லத்துரை (கூட்டணி) நான் அதனை ஆமோதிக்கிறேன்.

திரு. எஸ். தியாகராசா: பிரேரணைகளை ஏற்றுக் கொள்கிறோம்.

திரு. மரியாம்பிள்ளை (த. கா) நான் கொண்டு வந்த பிரேரணையில் திருத்தம்கொண்டுவர விரும்பவில்லை. தந்தை செல்வா, தலைவர் ஜி. ஜி. க்கு ஈடிணையற்றவர் என்றோ கூட்டணி சார்பில்லை என்றோ கூறவல்லை. அகில இலங்கை தமிழ் காங்கிரஸிற்கு வாக்களித்தவர்கள் இருக்கிறுர்கள். அவர்கள் சார்பில் இதனைக் கொண்டு வந்துள்ளேன். ஆதலால் திருத்தம் கொண்டு வர விரும்பவில்லை.

திரு. மரியாம்பிள்ளையின் தீர்மானம் சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து மூன்று தலைவர்களுக்கும் முத்திரை வெளியிட அரசைக் கோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேறியது. (சு)

ஓர்தீன் வெற்றிவீரன்

மயிர்க்கொட்டிகள், கனி துளைக்கும் பூச்சிப்புழுக்கள் உங்கள் வெங்காயம், மிளகாய், கத்தரிக்காய், கோவா போன்ற பயிர்களை நாசம் செய்கின்றனவா?

ஓர்தீன் S. P. 75 இந்தப் பூச்சிப்புழுக்களை அழித்து கூடுதலான விளைச்சலைத் தருவதோடு நெற்பயிர்களைத் தாக்கும் பூச்சி புழுக்களையும் அழிக்கவல்லது.

யாழ்ப்பாணம் நின்னைவேலியில் மேற்கொள்ளப்பட்ட திறன்காண் சோதனையில் சாதனையை நிலைநாட்டிய ஓர்தீன் S. P. 75 ஒரு ஹாகுரேஸ் விவசாய ரசாயனம்

எல்லா ஹாகுரேஸ் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

HARCROS
ORTHENE 75 SP
POISON

ஹரிசன் அன்ட் குரேஸ்பீல்ட் (கொழும்பு) லிமிட்டெட்.
330, டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஆப்கானை நடுநிலைமை வகிக்கும் அணிசேரா நாடாக அங்கீகரிக்க சோவியத் யூனியன் முன்வரவேண்டும்

அமெரிக்க அதிபர் அழைப்பு

வாஷிங்டன், பெப்.27

ஆப்கானிஸ்தானை நடுநிலைமை வகிக்கும் ஒரு அணிசேரா நாடாக உத்தரவாதமளிக்க அமெரிக்கா தயாராக இருக்கிறது.

அதே வேளையில் சோவியத் யூனியனும் அமெரிக்காவுடன் சேர்ந்து மேற்கண்ட உத்தரவாதத்தை அளிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு. ஜிம்மிகார்ட்டர் யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக மார்ஷல்டிட்டோவிடமிருந்து அண்மையில் கிடைக்கப்பெற்ற கடிதத்திற்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே திரு. கார்ட்டர் மேற்கண்டவாறு கூறினார்.

அக்கடிதத்தில் திரு. கார்ட்டர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆப்கானிஸ்தான் மக்களின் விருப்பத்திற்கிணங்க அந்நாட்டை நடுநிலைமை நாடாக அங்கீகரிக்கவே அமெரிக்கா என்றும் விருப்பம் கொண்டுள்ளது.

எனவே சோவியத்யூனியனும் ஆப்கானிஸ்தானிலிருந்து படைகளை வெளியேற்றி அணிசேரா நாடாக ஆப்கானிஸ்தானை அங்கீகரிக்கவேண்டும்

ஆப்கானிஸ்தான் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா என்றுமே தலையிட்டது கிடையாது; இனிமேலும் தலையிடமாட்டாது என்றும் திரு. கார்ட்டர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

"எவரிடமும் நான் மன்னிப்புக் கோரவில்லை"

புதுடில்லி. பெப். 27

ஜனதா கட்சித் தலைவர்கள் எவரிடமுமே நான் மன்னிப்புக் கோரவில்லை.

இவ்வாறு திரு. ஜெகஜீவன்ராம் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஜனதா கட்சிதேசிய நிர்வாகக் கமிட்டி கூட்டத்திற்குப் பின்னரே திரு ஜெகஜீவன்ராம் மேற்கண்டவாறு கூறினார்.

சிலகட்சித தலைவர்கள் பற்றி நான் பேசியதுகுறித்து வருத்தம்தெரிவித்துக்கொண்டேனே ஒழிய மன்னிப்புக்கோரவில்லை என்றும் அவர் கூறினார்.

சோவியத் துருப்புக்கள் அவசியம் அகன்றதும் ஆப்கானைவிட்டு வெளியேறும்!

பிரஷ்னேவ் [illegible] ரும்விளக்கம்

மாஸ்கோ, பெப், 27

''தமது இராணுவத் தொழில்துறையை வளம்படுத்துவதற்காக உலகை ஒரு நரகமாக ஆக்கும் முயற்சிகளுக்கு எதிராக உலகிலுள்ள நிதான புத்தியுள்ளவர்கள் அனைவரும் தமது உழைப்புக்களை இரட்டிப்பாக்கவேண்டும். தமது மேலாதிக்கத்தை உலகில் நிறுவவும், ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளது ஆதாயங்களை அழித்தொழிக்கவும் காலனியாதிக்க காலத்தை மீண்டும் கொண்டுவரவும் தீட்டப்படும் திட்டங்களை முறியடிக்கவேண்டும்.''

இவ்வாறு சோவியத் ஜனாதிபதி திரு. லியோனித் பிரஷ்நேவ் கூறினார். சோவியத் தலைநகரில் நடைபெற்ற தமது தேர்தல் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது;

''கார்ட்டர் நிர்வாகம், கெடுபிடி யுத்தவெறியை இன்று உருவாக்கிப் பிரசாரப்படுத்திவருவதற்குக் காரணம் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் நடைபெறப்போவது மட்டுமல்ல பிரதானமாகஇந்துசமுத்திரப் பிராந்தியத்தில் இராணுவத் தளங்களை விஸ்தரிக்கவும், மூன்றும் உலக நாடுகள் மீது நிர்ப்பந்தம் கொண்டுவரவும் எண்ணம்கொண்டிருப்பதே தான். அமெரிக்காவினதும், அதன் நேசநாடுகளினதும் கண்கள் உலகின் செல்வாதாரங்கள் மீதே பதிந்துள்ளது. ஆனால் சோவியத் யூனியன் பிற நாடுகளின் மீது, இயற்கை வளங்களின் மீது கண்வைக்கவில்லை. தளங்களைப் பெற எண்ணவில்லை. அது எந்தவொரு மூன்றும் உலக நாடுகளையும் நிர்ப்பந்திக்கவில்லை. பல சர்வதேச விவகாரங்களில் எமக்கிடையில் நெருங்கிய நிலைபாடுகள் உண்டென்று நாம் கருதுகின்றோம்.

''இந்திய-சோவியத் உறவுகள் வெற்றிகரமாக வளர்ச்சியடைந்துவருகின்றன. இந்தப் பிணைப்புக்கள் இரு நாடுகளினது மக்களது நலன்களுக்கு உகந்தவை, இந்திய-சோவியத் விண்வெளி வீரர்களது கூட்டு அண்டவெளிப் பயணத்திற்கான எமது கோரிக்கையைத் திருமதி இந்திரா காந்தியின் அரசு ஏற்றுள்ளது.

''ஆப்கானிஸ்தானில் துருப்புக்கள் இருக்கவேண்டிய அவசியம் அகன்ற அடுத்தகணமே சோவியத் துருப்புக்கள் அங்கிருந்து வெளியேறிவிடுமென்று கூறிய பிரஷ்நேவ், முதலில் பாகிஸ்தானிலிருந்து செயற்படும் ஆப்கானிஸ்தான் கலகக் குழுக்களுக்கு உதவியளிக்கும் நடவடிக்கைகளை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் கைவிடவேண்டும். அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளும் தனது தலையீடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

''கெடுபிடி யுத்தக்காரர்கள் சோவியத் யூனியனைப் பயமுறுத்தமுயலக்கூடாது. சோவியத்யூனியனும் அதன் நண்பர்களும் தம்மைத்தாமே எப்போதும் பாதுகாத்துவருகின்றன. அவற்றால் எந்தவிதக் கெடுபிடித் தாக்குதல்களையும் முறியடித்துவிடமுடியும். உலகின் சமாதானத்திற்கும் பந்தோபஸ்துக்கும் எதிரான எந்த நடவடிக்கையையும் நாம் எதிர்ப்போம்'' என்றும் கூறினார் அவர். (இ)

அண்மையில் கலைக்கப்பட்ட

9 சட்டசபைத் தேர்தல்கள் ஜுன் முதல்வாரம் நடக்கும்

பிரதம தேர்தல் ஆணையாளர் தகவல்

புதுடில்லி, பெப். 27

இந்தியாவில் கலைக்கப்பட்ட 9 சட்டசபைகளுக்குமான தேர்தல் ஜூன்மாதம் முதல் வாரத்திலேயே நடைபெறுமென இந்திய பிரதம தேர்தல் ஆணையாளர் திரு எஸ். எல் சக்தர் தெரிவித்துள்ளார்.

லோகசபைத் தேர்தலில் இடம் பெற்றுள்ள தடுமாற்றங்கள் சட்டசபைத் தேர்தலில் இடம் பெறாதவகையிலே வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் தவறுகள் ஏற்பட்டால் அது பற்றிக் கட்சித் தலைவர்கள் மார்ச் 11ம் திகதி வரை தமது ஆட்சேபனைகளைத் தெரிவிக்கலாமெனவும் வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் வேலைகள் மிக மும்மரமாக நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கட்சித்தலைவர்களின் ஆலோசனைகளைப் பெற்றபின் இறுதியாக வாக்காளர் பட்டியல் மார்ச் 22ம் திகதி தயாரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அசாமில் தேர்தல்

அசாமில் லோகசபைத் தேர்தலை தற்பொழுது நடத்துவது பற்றித் திட்டமெதுவும் இல்லையெனவும் தெரிவித்த அவர் இங்குள்ள சட்டசபைகள் கலைக்கப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

ஜூன் மாதம் முதல் வாரத்தில் 9 சட்டசபைத் தேர்தல்களையும் நடத்தாமல் விட்டு, பின்னர் நடத்தினால் மழைக்காலம் ஒரு பிரச்னையாக இருக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் யாவற்றையும் வாக்காளர் பட்டியல் ஒழுங்காக உள்ளதா என்று மறுபரிசீலனை செய்யும் படியும் பிரதமதேர்தல் ஆணையாளர் அவற்றிற்கு அனுப்பியுள்ள கடிதத்திலே கேட்டுள்ளார். ஏப்ரல் 30ம் திகதியளவில் இச்சட்டசபைத் தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் பூரணமாகத் தயாரிக்கப்பட்டுவிடுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வெ)

ஜனதா கட்சி ஒருங்கிணைந்த அரசியல்கட்சியாக இல்லை

ஜெகஜீவன் சந்திரசேகருக்கு கடிதம்

புதுடில்லி, பெப். 27

ஜனதாகட்சி இன்னும் கூட ஒருங்கிணைந்த ஓர் அரசியல் கட்சியாக இல்லை. எனவே இக்கட்சியை மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் கட்சியாக மாற்றி அமைக்க வேண்டும்,

இவ்வாறு ஜனதா கட்சிப் பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

ஜனதாகட்சித்தலைவர் திரு. சந்திரசேகருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனதாகட்சி உறுப்பினர்கள் ஆர். எஸ். எஸ்ஸிலிருந்து முற்றாக விலகியிருக்கவேண்டும் என்றும் திரு ஜெகஜீவன்ராம் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (இ)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி.

4 CYCLE BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம்.

Mel Ads

ராணி (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம். ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, இரவு 9-30
நாகேஷ்-முத்துராமன்-ஜெயந்தி-சௌகார் ஜானகி
சுந்தரராஜன் நடித்த
"எதிர் நீச்சல்" (புதிய பிரதி)
இயக்குநர் திலகம் K. பாலசந்தரின் மற்றுமோர் வெற்றிப்படைப்பு. நீண்டகால இடைவெளியின்பின் யாழ் நகரில் திரையிடப்படும் தரமான ஒப்பற்ற காவியம். நாகேஷின் நடிப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு கண்டு களியுங்கள்.

மனோஹரா A யாழ்ப்பாணம
தினசரி: 4 காட்சிகள்
HUN E

சாந்தி யாழ்நகர் போன்: 7642
தினசரி: 10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 இரவு
நியூயோர்க் தலைநகரில் பரபரப்பூட்டும் அதிபயங்கரக் கார் ஓட்டங்கள் சுமார் 10 நிமிடங்கள் உங்களைத் திகிலடையச் செய்கின்றது.
A HIGH SPEED CAR RACE FOR
10 MTS IN NEWYORK CITY
THE SEVEN UPS
STARRING: ROY SCHFIDER
Color — Action Packed

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா
கவிதா - சந்திரமோஹன்
நடித்த
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன்ட் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
சஞ்சிர் (ஹிந்தி) **SANJEER**

லிடோ (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30 & [illegible]
போன்: 7693
எம். ஜி. ஆர். ஜயலலிதா
கணவன்

SRIDHAR JAFFNA
Daily 4 Shows at 10-30 a.m. 3-30, 6-30, and 9-30 p.m.
A Classical Detective Story with a Modern Shape
The Most Highly Acclaimed Film of 1974.
JACK NICHOLSON FAYE DUNAWAY
in
CHINA TOWN
More suitable for Adults
Coming Soon: **THAT MAN BOLT**

REGAL JAFFNA. Phone: 360
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m. only
"THE FLESH AND BLOOD SHOW"
உல்லாசக் கேளிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இளம் நாடகக் குழுவில் தொடர்ந்து பல கொலைகள் நடக்கத் தொடங்குவதன் மர்மத்தைக் காண இன்றே விரையுங்கள்.
திகில் – காதல் – மர்மம் நிறைந்தது
(கண்டிப்பாக வயது வந்தவர் மட்டும்)
LOVE SEX TOGETHER WITH MURDERS AND THRILL - STRICTLY FOR ADULTS

உள்ளூர் அரிசி விலையையும் உலக சந்தை விலைக்கு அதிகரிக்கவும்

ஜனாதிபதி, பிரதமரிடம் வவுனியா எம். பி. கோரிக்கை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி ஒருகொத்தின் விலை 4 ரூபா 30 சதமெனவும், உள்ளூர் அரிசி ஒருகொத்தின்விலை 3 ரூபா 56 சதமெனவும் அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. அரிசியின் விலையில் உள்ளூர் அரிசி, இறக்குமதிசெய்யப்பட்ட அரிசி என விலையில் ஏற்றத்தாழ்வை உருவாக்கியது எமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அரிசியையும், நெல்விவசாயிகளையும் ஏளனம் செய்த ஒருசெயலாகக் கருத வேண்டியுள்ளது.

மேற்கண்டவாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், உணவுக்கூட்டுறவு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பிவைத்த மகஜரில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

அம்மகஜரில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இறக்குமதி செய்யப்பட்ட அரசியின் விலைப்படி நெல்லின் விலையைக் கணக்கிட்டுப்பார்த்தால் ஒருபுசல் நெல்லின்விலை 65 ரூபாவாக இருந்தல்வேண்டும். இதில் கொள்வனவு செலவு, நெல்அவித்துக்குத்தும் கூலி இவற்றிற்கென ஒருபுசல் நெலுக்குப் பத்து ரூபாவைக் கழித்தாலும், இன்று ஒருபுசல் நெல்லு 55 ரூபாவாக உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்படவேண்டும்

எமது நாட்டில் 20 வீதத்திற்குக் குறைந்தவர்கள் தான் நெல்விவசாயிகள் எஞ்சிய 80 வீதத்தினரும் நுகர்வோர்கள். ஆகவே நெல்லின் இன்றைய உத்தரவாத விலையை நாம் எவ்விதம் கூட்டலாமென. காணி, விவசாய அமைச்சர் பாராளுமன்றத்தில் பேசியதை, இந்நாட்டின் நெல்விவசாயிகள் ஒவ்வொருவரும் மறக்கமுடியாது.

நெல் விவசாயத்திற்குவேண்டிய செயற்கை உரத்திற்கு மான்யம் கொடுக்கின்றோம். ஆகவே நெல்லின் உத்தரவாத விலையைக்கூட்ட வேண்டிய அவசியம் இல்லையெனக்காணி, விவசாய உதவி அமைச்சர் முன்பு ஒருமுறை கூறியது அர்த்தமற்ற, தட்டிக்கழிக்கின்ற செயலாகும். ஒரு ஏக்கர் நிலத்திற்கு ஆகக்கூடியது 3 அந்தர் செயற்கை உரத்தை விவசாயி பாவித்தாலும் அவனுக்குக்கிடைக்கும் மான்ய உதவி ரூபா 200க்குமேல் இல்லை. இதேவேளையில் வாழ்க்கைச் செலவின் உயர்ச்சி, களைகொல்லி, கிருமிநாசினி ஆகியவற்றின் விலை உயர்ச்சி, எண்ணெய் விலை உயர்ச்சி, விவசாய உபகரணங்களின் விலை உயர்ச்சி, போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, நளாந்த கூலியாட்களின்சம்பளஉயர்ச்சி ஆகியவற்றைச் சுமந்துதான் எமது நாட்டில் விவசாயி நெல்விவசாயம் செய்கின்றான். இதனை அமைச்சர்களும், ஆட்சியாளர்களும் ஒழிப்பு, மறைப்பின்றி ஏற்க வேண்டும்.

அபாய நிலைக்கு வழிதேடுவதாகும்

எமது நாட்டின் தேவையில் அரைப்பங்கை உற்பத்திசெய்கின்ற லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு வலுவுள்ள தோழிற்சங்கம் இல்லை. ஆகவே இவர்கள் இயங்க ரீதியாக எந்த வகையிலும் தங்கள் எதிர்ப்பை ஆட்சியாளர்களுக்குக் காட்ட முடியாதவர்கள் என இவர்களை உதாசீனம் செய்து, நாம் இடுகின்ற உத்தரவாத விலைக்கு விவசாயி நெல்லுத்தர வேண்டுமென வஞ்சிப்பது எதிர்காலத்தில் எமது அரிசித்தேவையின் கால் பங்கைக்கூட உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத அபாயநிலைக்கு வழிதேடுவதாகும்.

உலக சந்தையில் அரிசிவிலை எந்தளவிற்கு உயர்கின்றதோ அந்தளவிற்கு எமது நாட்டின் உற்பத்தி அரிசியின் அளவும் விலை உயர்த்தப்படவேண்டும்.

இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையின்படி, எமது உள்ளூர் உற்பத்தி நெல்லை அரிசியாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அன்றேல் இறக்குமதி செய்யப்படுகின்ற அரிசியின் விலைக்கேற்ப உள்ளூர் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படுகின்ற நெல்லின் உத்தரவாத விலையை உயர்த்தவேண்டும்.

இந்தக்கோரிக்கை நியாயமானதென எமது நாட்டின் நெல்விவசாயிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிப்பார்கள். அவசியம் ஏற்படின் நாடாளுமன்றத்தில் இக்கோரிக்கை பற்றி விவாதித்து வாக்குப் பெறுவதற்கு தனக்கு விரைவில் சந்தர்ப்பம் தரவும் என்றும் திரு. சிவசிதம்பரம் அம்மகஜரில் சேட்டுள்ளார்.

(வெ)

அனுமதிப்பத்திரமின்றி

துப்பாக்கி 'ரவை' வைத்திருந்த இருவரும் விடுதலை!

(மாவிட்டபுரம்)

அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி ரவைகளை வைத்திருந்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் இருவரும் நீதிபதியினால் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டனர்!

குருநகரைச் சேர்ந்த எஸ் குணரத்தினம், எஸ். எம் சமரபாலா ஆகியோர் அனுமதியின்றி மூன்று துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த சமயம் சுன்னாகம் பொலிசாரால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நபர்கள் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டசமயம் இந்நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆகியோர் "அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டபின் கைதான இவர்களை பொலிசார் அவசரகாலச் சட்டத்தின்கீழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததால் கடந்த 2 மாதங்களாக இவர்கள் அநியாயமாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்ததாக சுட்டிக்காட்டி இந்நபர்கள் துப்பாக்கி ரவைகளை வைத்திருந்தார்களே தவிர துப்பாக்கியை வைத்திருக்க வில்லையாதலால் துப்பாக்கி யில்லாமல் ரவைகளால் பிரயோசனம் இல்லையெனவும் வாதிட்டனர்,

இதையடுத்து நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி எதிரிகளை எச்சரித்து விடுதலை செய்தார்.]கு]

இன்றைய பலன்

மாசிமாதம் 16-ம் திகதி
28-2-1980 வியாழக்கிழமை

மேடம்: விவசாயிகள் முன்னேற்றமடைவர். உழைப்பினால் உற்சாகம் பெருகும் தொழில் துறையிலும் புதிய சாதனை உருவாகும்.

இடபம்: துன்பத்தின் நிழலாட்டம் விலகிவிடும். பொருள் வளத்திலும் திருப்தி நிலவும். பூமியால் லாபமும் உண்டு.

மிதுனம்: குடும்பப் பிரச்சனை தலை தூக்கும். நண்பர்கள் சகவாசத்தைத் தவிர்த்து நடக்கவும். செலவுகளும் அளவுக்கு மிஞ்சியதாகவேயிருக்கும்.

கடகம்: வாழ்க்கை மேடு பள்ளம் நிரம்பியதாக விருக்கும். அபாய காரியங்களைத் தவிர்க்கவும். உடல் நலனையும் பேணவும்.

சிங்கம்: உதவு முறைகள் பலப்படும், உற்சாகம் பெருகும். நண்பர்கள் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. கல்விச் சிறப்புமுண்டு,

கன்னி: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். சிறிய விடயத்திற்கும் குறை கேட்க நேரிடும். பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: மாதுரு வழியால் மகிழ்ச்சியுமுண்டு. நன்மையான காரியம் ஒன்றும் மேற்கொள்ளப்படும், இல்லச்சிறப்பும் உண்டு

விருச்சிகம்: தெய்வ வழிபாட்டில் ஆர்வம் செலுத்துவீர்கள். வாழ்வும் ஒளிமயமாகும். பூமிச் சுகமும்உண்டு.

தனுசு: எதிலும் முன்னெச்சரிக்கை நன்று. எதிரிகள் மோசடி பலமாக விருக்கும் கடமையில் கவனம் செலுத்தவும்.

மகரம்: காதலர்கள் மகிழ்ச்சியடைவர். களஸ்திர வழியாலும் நன்மையுண்டு. தொழிலும் முன்னேற்றமடையும்,

கும்பம்: விபத்து நேரிடலாம், விளைந்திடும் துன்பம். தொழில் துறையில் பொறுமை வேண்டும். தெய்வ வழிபாடு நன்று.

மீனம்: பிதா வழிச்சிறப்புமுண்டு. தரும காரியங்களில் ஈடுபடுவீர்கள். அறிஞர்கள் ஆதரவும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
வீரக்கனல்

ஹரன் யாழ்ப்பாண
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். -அஞ்சலிதேவி
மர்மயோகி
(புதிய பிரதி)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
கமல்ஹாசன்-சுஜாதா
உயர்ந்தவர்கள்

வெளிநாட்டில் வேலைதேடித்தருவதாக

ரூபா 3 லட்சம் மோசடியாம் எதிரிக்கு ரூ. 20 ஆயிரம் பிணை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் பதவிபெற்றுத்தருவதாககூறிக் இளைஞர்களிடம் 3 லட்சம் ரூபா மோசடி செய்ததாக கைதான சந்தேகநபர் 20,000 ரூபா பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். நீதவான் திரு. எஸ். இராஜசிங்கம் முன்னிலையில் இம்மோசடி தொடர்பான வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3 லட்சம் ரூபா மோசடி செய்ததாக சந்தேகத்தின பேரில் கைதான பம்பைமடுவைச்சேர்ந்த க. செல்வராசா, 20,000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேல்விசாரணை அடுத்த மாதம் 11ம் தேதிக்கு பின் போடப்பட்டுள்ளது. [கொ]

அபராதம்

[மாவிட்டபுரம்]

சட்டவிரோதமாக வடிசாராயம் வடித்ததாகக் கைதான 3 நபர்களுக்கு மல்லாகம் நீதிபதி தலா 300 ரூபா அபராதம் விதித்தார்.

அச்சுவேலியையடுத்த வளலாயில் கல் உடைத்து தொழில செய்து வருவோர் சட்டவிரோதமாக வடிசாராயம் காய்ச்சுவதிலும் ஈடுபட்டிருந்தார்களாம். அங்கு திடீர் வேட்டை நடாத்திய பொலிசார் 270 போத்தல் வடிசாராயத்துடன் அங்கு காணப்பட்ட உபகரணங்களையும் கைப்பற்றி பூதப்பிள்ளை புஷ்பராஜா தேவசகாயம் சற்குணம் நன்னியர் நாகராசா ஆகியோரையும் கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதி திரு. எஸ் ஆனந்தக்குமாரசாமி மூவருக்கும் தலா 300 ரூபா அபராதம் விதித்து உபகரணங்களை அழிக்குப்படியும் உத்தரவிட்டார். [கு[

கந்தப்போடியின் சடலம் அரசசெலவில் அடக்கம்!

(மட்டக்களப்பு)

பொலிசாருடன் நடைபெற்ற துப்பாக்கிப்போரில் மரணமானவரான கந்தப்போடியின் சடலம் அரசாங்க செலவில் அடக்கம்செய்யப்பட்டது.

கொலை, கொள்ளை, தீவைத்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டதாகவும், பொதுமக்களுக்குப்பெரும் தொல்லை கொடுத்ததாகவும், பொலிசாருக்குப் பெரும்தலையிடியைக் கொடுத்துவந்ததாகவும், கருதப்பட்டவரும்பிரபல 'கேடி' என வர்ணிக்கப்பட்டவருமான கந்தப்போடியின் சடலத்தைக்கோரி எவரும் முன்வராததால் நெடியாவத்தை கிராமசேவகரின்மேற்பார்வையில் அநாதரவான முறையில் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

கந்தப்போடி மரணமாவதற்கு முன்னர், அன்று காலை சவளக்கடை எனும் இடத்திலுள்ள ஒரு வீட்டில் 15,000 ரூபா பெறுமதியான நகைகளையும். ரொக்கப் பணத்தையும் துப்பாக்கிமுனையில் கொள்ளையடித்ததாகக் கூறப்பட்டது.

இதுதொடர்பாகக்கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து, வெல்லாவெளிவயல்வாடியில் கந்தப்போடி நடமாடலாமென அறிந்தவிசேஷபொலிஸ் கோஷ்டி, வெல்லாவெளி பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர்கமலேஸ்வரன்தலைமையில் இருபத்துமூன்று பொலிசாருடன் அப்பகுதியை 'வலை' விரித்தது. இத்தேடுதல் 'வேட்டை'யில் அனுராதபுரத்திலிருந்து வந்த விசேஷபொலிசாரும் சேர்ந்து கொண்டனர்,

பொலிசார் கந்தப்போடியைத் தேடிச் சென்றபோது, அவர் வெல்லாவெளியிலுள்ள வாடியொன்றில் 'டேப்றெக்கோட'ரில் ஒரு பாட்டை ரசித்துக் கொண்டிருந்தாராம். வயல்வாடியை பொலிசார் சுற்றிவளைத்த விஷயம் கந்தப்போடிக்குத் தெரியவரவே, பொலிசார் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், கந்தப்போடி மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் கந்தப்போடிக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச்சண்டையில் கந்தப்போடியின் முழங்காலின்கீழும் பின்னர் நெஞ்சிலும் துப்பாக்கிச் சூடு விழுந்ததாகவும் இதனைத் தொடர்ந்து கந்தப்போடி ஸ்தலத்திலேயே மரணமானரென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஸ்தலத்தில் மரணமான கந்தப்போடியைப் பொலிசார் சோதனை செய்தபோது, அவரது கழுத்தில் 4 பவுண் நிறையுள்ள தங்கச்சங்கிலி காணப்பட்டதாம். காற்சட்டைப் பையில் அன்றுகாலை கொள்ளையடித்த நகையும், ரொக்கப் பணமும் இருந்ததைப் பொலிசார் கண்டனராம்.

இவற்றைவிட 'டேப்றெக்கோடர்', துப்பாக்கியையும் பொலிசார் கண்டெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. பி. சுந்தரலிங்கம் ஸ்தலத்திற்குச் சென்று கந்தப்போடியின் மரணவிசாரணையை நடத்தினர். மட்டக்களப்பு பொலிஸ் அதிபர் திரு. சி. அம்பிகாபதி, வெல்லாவெளிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் கமலேஸ்வரன் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகளும் இம்மரண விசாரணையின்போது சமூகமளித்திருந்தனர்.

மரணவிசாரணையின்பின்னர் கந்தப்போடியின் சடலத்தை எவரும் உரிமை கோராததால் அதனை அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யும்படி மாவட்ட நீதிபதி திரு. பி. சுந்தரலிங்கம் பொலிசாரைப்பணித்தார். அதனைத் தொடர்ந்து கந்தப்போடியின் சடலம் அநாதரவான முறையில் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணத்தில்

கொழும்பு விலையில் சுத்திகரிக்கப்பட்ட பால்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சங்கத்தில் கொழும்பு விலையான 1 ரூபா 40 சதத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட ஒரு போத்தல் பால் மார்ச் 1ம் தேதி முதல் விற்பனைசெய்யப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரை சுவாமி எடுத்தமுயற்சியினால், இந்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட பாலை யாழ்ப்பாணம் கொண்டுவந்து அதே விலைக்கு விற்பனை செய்வது சிரமமாகவிருந்தது, யாழ்ப்பாணத்திற்கு பிரயாண ஏற்றுக்கூலியினால் அதிக விலைக்கு விற்கவேண்டியிருந்தது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி, கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுடன் தொடர்புகொண்டு கொழும்பு விலையில், யாழ்ப்பாணத்தில் பாலை விற்க ஏற்பாடு செய்யுமாறும் ஏற்றுக்கூலியை அரசு ஏற்கவேண்டும் என்றும் கோரியிருந்தார்.

இக்கோரிக்கையை ஏற்ற அமைச்சர், மார்ச் 1ம் தேதி முதல், யாழ்ப்பாணத்திலும், சுத்திகரிக்கப்பட்ட பாலை 1 ரூபா 40 சதத்திற்குவிற்க, அமைச்சு மூலம் ஏற்பாடுசெய்துள்ளார். [க]

நுண்கலைகள் எல்லோரையும் ஒற்றுமைப்படுத்துகின்றன

கல்லூரி ஆரம்பவிழாவில் உரை

[யாழ்ப்பாணம்]

"நுண்கலைகள் மனிதனுக்கு பூரண இன்பத்தைக் கொடுப்பதுமல்லாமல், ஒருவனை பூரண மனிதனாகவும் ஆக்குகின்றது. விஞ்ஞானக் கலைகளைப் பயிலும் பூரணவர்களும் நுண்கலைகளைப் பயிலவேண்டும். இன, மத பிரதேச வேறுபாடற்ற முறையில் கலைஞர்கள் என்ற முறையில் எல்லோரையும் ஒற்றுமைப் படுத்துவது நுண்கலைகளே"

இவ்வாறு யாழ் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை ஆரம்பித்து வைத்தபோது கல்வி அமைச்சின் பிரதம நுண்கலை அதிகாரி திரு. சி. டி. எஸ். குலதிலகா பேசும்போது குறிப்பிட்டார். இவ்வைபவத்துக்கு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமைதாங்கினார். ஏராளமான பொதுமக்களும், சங்கீத, நடன ஆசிரியர்கள், மாணவர்களும் பங்குபற்றிய இவ்வைபவத்தில் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் உரையாற்றும்போது, சேர். பொன் இராமநாதன் கலைகளுக்கே தன்வாழ்வில் பெரும்பங்கைச்செலுத்தியவர். அவர் உருவாக்கிய கல்லூரியிலேயே அரசாங்கம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியைத் தொடக்கிவைப்பதும் தமிழ்மக்களுக்கும் பிள்ளைகளுக்கும் பெரும் வரப்பிரசாதமாகும். இங்கு சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம் ஆகிய நுண்கலைகள் மிகத்திறமான முறையில் புகட்டப்படுமாதலால் மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தமக்கும் இனத்துக்கும் தொண்டாற்றும் வகையில் இக்கல்வியைப்பெறவேண்டும்''

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி இ. அருணசலம் வரவேற்புரை கூறினார்.

மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் திரு வி. தர்மலிங்கம் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை நன்றியுரை கூறினார். யாழ். பல்கலைக் கழக நுண்கலை மாணவர்கள், இராமநாதன் மாணவிகளினது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [நா]

திருக்குறள் விழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலை சைவமகாஜன வித்தியாலய திருக்குறள் விழாவும் உயர்தர மாணவர் மன்றத் தொடக்க விழாவும் அதிபர். திரு. த. திருநாவுக்கரசு தலைமையில் இன்று காலை நடைபெறவுள்ளது.

வடமாநிலக்கல்விப் பணிப்பாளர் தி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [கு]

……

மாணவர் கல்விச் சுற்றுலா

(நெல்லியடி)

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின் பொருட்டு, அச்சுவேலியிலுள்ள கைத்தொழில் பேட்டை, காரைநகர் சீ-நோர் அபிவிருத்தித் திட்டம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஆகியவற்றிற்கு சென்று பார்வையிட்டனர். (கு)

……

சிறுவனுக்கு பிரம்படி

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் பஸ்நிலையத்தில் சந்தேகத்திக்கு இடமான முறையில் நடமாடிய சிறுவனுக்கு 6 பிரம்படி வழங்கப்பட்டது.

தென் இலங்கையைச் சேர்ந்த ஹெட்டி ஆராய்ச்சிகே நிமால் என்ற இச்சிறுவன் யாழ்பஸ்நிலையத்தில் நள்ளிரவு வேளையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்றதைக் கண்ட யாழ் பொலிசார் அச்சிறுவனைக் கைதுசெய்து யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

யாழ் நீதிமன்ற நீதிபதி கே. எஸ். மகேசன் எதிரிக்கு 6 பிரம்படி வழங்கும்படி தீர்ப்பு வழங்கினார். (கொ)

நெல்லியடியில் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இன்றும், நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பொருட்காட்சியொன்றை நடாத்தவுள்ளது.

கைப்பணி, மின்தறி பொருட்கள் உட்பட ஏனைய பாவனைப் பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்படும்.

இப்பொருட் காட்சிககான ஒழுங்குகளை மேற்படி ப. நோ. கூ. சங்க இயக்குநர் சபை மேற்கொண்டுள்ளது. (வெ-நா)

நோர்வூட்டில் முத்தமிழ் விழா

(நோர்வூட்)

நோர்வூட் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான வெள்ளிவிழாவை முன்னிட்டு இலக்கியவட்டம் நடாத்தும் முத்தமிழ்ப் பெருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

திரு. த. சண்முகசுந்தரம் தலைமையில் இன்று நடைபெறும் முதல்நாள் நிகழ்ச்சியில் நோர்வூட் தமிழ்மகா வித்தியாலயம், திரு. இ. இரத்தினம் ஆசியுரை நிகழ்த்துவார். 'ஈழத்தின் இன்றைய தமிழ் இலக்கியங்கள்' என்ற தலைப்பில் கருத்தரங்கும் நடைபெறும்.

இறுதிநாளான மார்ச் 1-ம் திகதி நிகழ்ச்சிகள் இ. தொ. கா. செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமிதலைமையில்நடைபெறும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார், வேல் அமுதன் எழுதிய 'வாழும் வழி' நூலும் வெளியிடப்படும். [கு-நா]

அமரர் குமாரசாமி

நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் சாவகச்சேரி எம். பி. அமரர் வி. குமாரசாமியின் இரண்டாவது நினைவு தினம், அடுத்தமாதம் 10ம் தேதி சாவகச்சேரியில் கொண்டாடப்படவிருக்கிறது,

அமரர் வி. குமாரசாமி அறங்காவல்குழு இதற்கானஏற்பாடுகளைச் செய்துவருகிறது. (க)

சீனிவிலை…

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கும் உத்தேசம்இல்லையென்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனியைப் பதுக்கிவைத்திருப்பவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் அமைச்சுஎச்சரிக்கை விடுத்துள்ளது.

பண்ணாகம்…

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரி ஒரு பொல்லை எடுத்து வந்து காலமானவரின் தலையில் அடிக்க அவர் நிலத்தில்வீழ்ந்துவிட்டார். பின்னர் கத்தி ஒன்றை எடுத்து வந்து காலமானவரின் முதுகில் நான்கு தடவை குத்தினார் பின் காரொன்றில் ஏறி எங்கோ போய்விட்டார் என்றார்.

எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சியை குறுக்கு விசாரணை செய்தபோது எதிரிக்கும் காலமானவருக்குமிடையில் இடம்பெற்ற வாக்குவாதத்தை 25, 30 யாருக்கு அப்பால் நின்றே பார்த்ததாகவும் அச்சமயம் வீதியால் வாகனங்களும் சென்றதால் சரியாகக் கூறமுடியாதென்றும் தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி எதிரியை விடுதலை செய்தார். எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், செல்வி. மோகாந்தி செல்வரத்தினம் ஆகியோர் ஆஜராகினர். (கு)

கோவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ஜனநாயக மரபுகளை அனுசரித்து தாம் மேற்படி பதவியிலிருந்து விலகிக் கொள்வதாக அவர் ஆளுநருக்கு எழுதியுள்ளார்.

கடந்த தேர்தலில் அ. தி. மு. கழகத்திற்கு படுதோல்வி ஏற்பட்டிருந்தபோதிலும் கூட திரு. எம். ஜி. ராமச்சந்திரன் கட்சியைப் புனரமைப்புச் செய்ய முன்வரவில்லையென்று திரு. செழியன் நிருபர்களிடம் கூறினார்.

[illegible] பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் [illegible] 28 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a news-paper at the General Post Office Sri Lanka under No QB/8948/78 The EelanaduP. B. No.49, Tlegram Eelanadu. Phone 381